# சுதந்திரப் பறவைகள்

பறவை 09 பாடல் 01 1994 தை அன்பளிப்பு ரூபா 5 00


பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

## தமிழீழ காவற்றுறை நிர்வாகத்தில் பெண்கள் வகிக்கும் பங்கு

**தமிழீழக் காவற்றுறையின் நிர்வாகக் கட்டமைப்பில் பெண்கள் முக்கிய பங்கு வகித்துவருகின்றனர். காவற்றுறைப் பணிமனைகளின் நிர்வாக அதிகாரிகளாக பெண்கள் பொறுப்பேற்று, தமது பொறுப்புகளைத் திறம்படச் செய்துவருகின்றனர். பெண்களின் சமூக முன்னேற்றத்துக்கு இது ஒரு நல்ல முன் உதாரணமாகும்.**

...ழீழக் காவற்றுறையின் ...கள் அணியினரின் ...சி அபாரமானது. பெண் ...யும் ஆண்களையும் ஒரே ...த்தில் அணி திரட்டி, பயி... வழங்கி, அவர்களுக்கான ...லத் திட்டங்களைப்பாகு ...ற்ற முறையில் வகுத்துச் ...லாற்றும் இதன் நிர்வாகச் ...லாக்கம் சமூகப்பார்வை ... பெண்களின் முன்னே ...த்தை நன்கு புலப்படுத்தி ...ள்ளது.

... பெண்களைநிர்வாகரீதியில், ...ரச்சினைகளை அணுகும் ...முறைகளில், ஒழுங்குமுறை ...யான செயற்திட்டங்களில் வள ...ரச் செய்துள்ளது.

திறமை அடிப்படையிற் கொடுக்கப்பட்ட நியமனங்களில் கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெண் காவற்றுறை அதிகாரிகளின் தலைமையில் காவற்றுறைப் பணிமனைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன பெண், ஆண் காவற்றுறை உறுப்பினர்களைக் கொண்ட இந்நிலையங்களில் பெண்களே தலைமைப் பொறுப்பை ஏற்று, நீதி நிர்வாக ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆண் காவற்றுறை உறுப்பினர்கள் செய்யும் சகல வேலைகளையும் பெண்கள் அணியினர் செய்து,தங்களது நிர்வாகத் திறமையில் நம்பிக்கையுறச் செய்துள்ளனர். வீதி ஒழுங்கு நடவடிக்கைகள், அலுவலக நிர்வாகம் என்பவற்றில் தங்களது தனித்துவமான முத்திரையைப் பதித்துள்ளனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்குகளிலும் தாங்களே முன்னின்று,'வழக்கை நெறிப்படுத்தி' தங்களது திறமைகளை வெளிப்படுத்தி உள்ளனர். பெண் காவற்றுறை அணியினர் நீதிமன்ற வழக்குகளை நெறிப்படுத்தும் இம் முறையானது சிறிலங்காவின் நீதிமுறைகளிலோ,அன்றி இந்தியாவின் சட்ட மன்றங்களிலோ நடைமுறையில் காணமுடியாத ஒரு விடயம். எனவே இம்முறையானது,அதிலும் பெண்கள் நெறிப்படுத்துகின்ற இம்முறையானது கோடிட்டுக்காட்டவேண்டிய

(2ஆம் பக்கம் பார்க்க)



1991-06-01 அன்று தமிழீழக் காவற்றுறையின் பெண்-ஆண் உறுப்பினர்கள் தமது பயிற்சியை ஆரம்பித்தனர்.

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் 1991-11-19 அன்று, தமிழீழக் காவல் துறையினரின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, அவர்களின் செயற்பாடுகளை அதிகாரபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

ஒரு தனியரசை நிறுவப் போரிடும் தமிழீழத் தேசிய இனமாகிய எமது இருபது ஆண்டு காலப் போர் வரலாற்றில், பொறித்து வைக்கவேண்டிய சிறப்புமிக்க ஒரு நிகழ்வு என்றே இதைச் சொல்லவேண்டும்.

இன்று தமிழீழத்தில் படிப்படியாக இவர்கள் காவற் பணிமனைகளைத் திறந்து, தமது சேவையை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

உள்ளே


- ஆனை கட்டிய அரியாத்தை
- நான்காம் ஆண்டு நினைவில் மேஜர் சோதியா
- சுதந்திரத்தைத் தேடி
- தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற் புலிகளின் மகளிர் படையணி
- தெளிவு
- கேணல் கிட்டு நினைவாக...
- நோபல்பரிசு பெற்றபெண்கள்


விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடு

எங்கள் பார்வையில்...

# விடுதலைப் பயணத்தில் அணிதிரள்வோம்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுதம் ஏந்திய போராட்டமாக மாறி இரண்டு தசாப்தங்கள் கடந்துவிட்டன. இந்த ஆயுதப் போராட்டத்தில் பெண்கள் நேரடியாகப் பங்குபெறத் தொடங்கி ஒரு தசாப்தம் முடிவடைகிறது.

தமிழீழத்தில் நடைபெறும் பெண்விடுதலைக்கான போராட்டம் தனித்துவமான பண்புகளைக் கொண்டது. ஈழத்துத் தமிழ்ச் சமுதாயம் மிகவும் இறுக்கமான, பழமைவாத நடைமுறைகளைக் கொண்டது; அதிலும் பெண்கள் மீது மிகவும் அழுத்தமான நடைமுறைகளைப் பிரயோகித்து வருவது; ஒரு பெண் தான் சம்பந்தப்பட்ட விடயமொன்றில் தன்னிச்சையாக முடிவெடுப்பதுகூட அந்தக் குடும்பத்துக்கே அவமானம்தரும் விடயமாக நினைப்பது.

இத்தகைய ஒரு கடும்போக்குள்ள சமூக அமைப்பைச் சேர்ந்த சில பெண்கள், ஏறத்தாழ பத்து வருடங்களின் முன் தம்மீது பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களை உதறித் தள்ளினர். தாம் சம்பந்தப்பட்ட விடயத்தில் தாமே முடிவெடுத்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்திக்கொண்டிருக்கும் ஆயுதப்போரில் இணைந்துகொண்டனர்.

இந்த விடயம் அன்று தமிழீழம் முழுவதுமே ஒரு சர்ச்சையை ஏற்படுத்தியது. தனக்கு மிகப்பெரிய இழுக்கு ஒன்று ஏற்பட்டுவிட்டதாக எண்ணி ஈழத்தமிழ்ச் சமுதாயம் தன்னை நொந்துகொண்டது. இந்தச் சம்பவத்தின் எதிரொலியாக ஏனைய பெண்கள் மீது மேலும் அழுத்தங்களைப் பிரயோகித்தது. படித்துக்கொண்டிருந்த இளவயதுப் பெண்கள் பலர் பாடசாலைகளிலிருந்து நிறுத்தப்பட்டு, வீட்டுள் முடக்கப்பட்டனர். போரிலே இணைந்த பெண்களைப்பற்றிப் பேசிய பெண்கள் கூட 'ஓடுகாலிகள்' என்று விமர்சிக்கப்பட்டனர்

சமூகம் தனது பிடியை இறுக்கிய பின்னரும் பெண்கள் ஆயுதப் போரிலே இணைவது தொடர்ந்தது; தொடர்ந்துகொண்டிருக்கிறது.

இதிலிருந்து இரண்டு விடயங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

ஒன்று, பெண்கள் செல்லவேண்டிய சரியானபாதை எது என்பதை பெண்களே வழிகாட்டவேண்டும். அத்துடன் மிகவும் இறுக்கமான, பிற்போக்கான சமூக அமைப்புக்குள் இருந்துகொண்டும் ஒரு புரட்சியைப் பெண்களால் நடாத்தமுடியும். முதலில் யார் தொடக்கி வைப்பது என்று ஒரு பிரச்சினை இருந்தாலும் யாராவது ஒரு பெண் ஆரம்பித்து வைக்க, அவரைப் பின்தொடர ஏனைய பெண்கள் தயாராக இருக்கிறார்கள்.

மற்றையது, விடுதலை வேகங்கொண்ட, புரட்சி எண்ணங்கொண்ட பெண்களை எந்தக் கட்டுப்பாடுகளைப் பிரயோகிப்பதன் மூலமும் அடக்கமுடியாது. இந்த இரண்டு விடயங்களையும் ஈழத் தமிழ்ச் சமுதாயம் இன்று நன்கு புரிந்துகொண்டிருக்கும்.

தமிழ்ச் சமூகம் மட்டுமல்லாது, முழு உலகுமே எப்படி இந்த மாற்றம் நிகழ்ந்தது என்று வியந்துகொண்டிருக்கின்றது. அதனால்தான் நாங்கள் ஏனைய நாடுகளில் நடந்த, நடந்துகொண்டிருக்கின்ற பெண் விடுதலைப் போராட்டங்களைவிட நாம் நடாத்தும் போராட்டம் தனித்துவமானது என்று சொல்கிறோம். ஏனெனில் முன்னேறிய நாடுகளில் கூட வீட்டிலிருந்து ஒரு பெண் வெளியே வருவது, தன்னிச்சையாகச் செயற்படுவது என்பது ஒரு பெரிய விடயமல்ல. ஆனால் தமிழீழத்திலே வீட்டிலிருந்து பெண்கள் வெளியே வருவதற்கும் அந்த மாற்றத்தைச் சமூகம் ஓரளவுக்காவது எற்றுக்கொள்வதற்குமே நீண்ட காலப்பகுதி தேவைப்பட்டது. ஆகவே இந்த மண்ணில் இது பெரிய மாற்றந்தான். ஆனால் இதுதான் பெண்விடுதலையல்ல. அதை அடைய இன்னும் நீண்ட தூரம் போகவேண்டியுள்ளது. ஆகவே அதற்கான பாதையில் அணிதிரளவேண்டியது அனைத்துப் பெண்களினதும் கடமையாகும்.

## தமிழீழக் காவற்றுறை

விடயம் என்றே குறிப்பிடலாம்.

மேலும் இத்துறையிலுள்ள பெண்கள் பிரதேச ரீதியாக இரவுச்சுற்றுக் காவல்களிலும், ஏன் இரகசியப் புலனாய்வு விசாரணைகளிலும் கூட கடமைகளை மேற்கொள்வதும், இவை பலவற்றில் பொறுப்பாகச் செயலாற்றுவதும் இவர்களின் முன்னேற்றகரமான நடவடிக்கைகளைப் புலப்படுத்தியுள்ளது.

எந்தப் பிரச்சினைகளையும் அணுகி ஆராய்வதிலும், தங்களது நிர்வாகங்களைத் திறம்பட நடாத்துவதிலும் பெண் காவற்றுறையினரின் இச்செயற்பாடானது தமிழீழப் பெண்களை முன்னேற்றகரமான, துணிவுள்ள பெண்களாக வாழ வகைசெய்து இருக்கிறது.

''இப்போது இந்த அரக்கான் ரோடில் நின்றுகொண்டிருக்கும்போது ஒரு மகத்தான புராதனப் பெருமை வாய்ந்த நாகரிகத்தின் வீழ்ச்சியின் மத்தியில் நிற்பதாக எமக்குத் தோன்றுகிறது. இதோ இங்கு குவிந்து கிடக்கும் நாகரிக நாசத்தின் அடியில் நமது அருமையான, விலை உயர்ந்த பரம்பரைப் பண்புகள் எல்லாம் - அன்பு, கருணை, பரஸ்பர மதிப்பு, சகோதரத்துவம் எல்லா லட்சியங்களும் அழிந்து புதைந்து கிடக்கின்றன. இந்த மிகப் பெரிய அழிவுச் சக்தியை எதிர்த்து, மஜதா, சரளா முதலிய உத்தமிகள் தங்கள் தளர்ச்சியடைந்த கைகளுடன் போரிட்டார்கள். ஆனால் அவர்களுடைய கோடிக்கணக்கான சகோதரிகளாகிய நாம் ஈவிரக்கமில்லாமல் நடந்துகொண்டோம்; அவர்களுடைய நம்பிக்கைக்குத் துரோகம் செய்தோம்; கைகளைப் பிசைந்துகொண்டு, ஆத்ம நித்திரை செய்துகொண்டிருந்தோம். அந்தப் பெண்களின் எதிர்ப்பெல்லாம் முறியடிக்கப்பட்டுவிட்டது; அவர்களே அந்த ஊழிக் கால அழிவுக்குப் பலியாகிவிட்டார்கள்''

- விடுதலைப் போர் வீராங்கனை கல்பனா

# பெண்களுக்கென ஒரு நூல்நிலையம்

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம் பெண்களுக்கான தகவல்மையமாகத் தொழிற்படவுள்ளது. இதன் முதற்கட்டமாக அரிய நூலகம் ஒன்றினை அறிமுகப்படுத்துகிறது.

எமது சமூக அமைப்பின் சரிபாதிக்கும் மேற்பட்ட எண்ணிக்கையைக் கொண்டபெண்களின் பிரச்சனைகளை தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம் ஆராய்கிறது. இந் நிறுவனம் எதிர் காலத்தில் தமிழீழப் பெண்களின் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் ஏதுவான திட்டங்களை முன்வைக்கிறது.

பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காணலும் அதனை ஆய்வு செய்வதும் இதற்கான தீர்வுத் திட்டங்களை வகுத்தலும் பெண்களின் முன்னேற்றங்களுக்கான ஆலோசனைகளை வழங்கலும் இதன் குறிக்கோள்களாக இருக்கின்றன. அதாவது எமது சமூகத்தில் பெண்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள், நலன்கள் பற்றிய புள்ளிவிபரங்களை சேகரிக்கவும் பெண்கள் மனம்விட்டு தமது பிரச்சினைகளைக் கூறி அதற்குரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளவும் பெண்கள் தொடர்பான ஆவணங்கள், புத்தகங்களைப் பேணவும்இவ்வமைப்பு நிறுவப்பட்டது.

இதன் முதற் கட்டமாக இந் நிறுவனம் நூல் நிலையம் ஒன்றினை இவ் வருடம் ஜனவரி முதலாம் திகதி திறந்து வைத்துள்ளது.

பெண்களின் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட பல அரிய நூல்களை இந் நூலகம் கொண்டுள்ளது. கோப்பாயிலுள்ள இந் நூலகத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளும் வாசகர்களை இந் நிறுவனம் வரவேற்கிறது. 'பெண்கள் பகுதி' என்ற தனிப்பட்ட பிரிவையும் இந்நூல்நிலையம் கொண்டுள்ளது. இந் நூலகம் பொதுவான பல நூல்களையும், துறைசார்ந்த நூல்களையும் கொண்டிருப்பினும், மேலாக பெண்களை மையப்படுத்திய நூல்களை அதிகளவிற் கொண்டுள்ளது.

பெண்கள் பற்றிய சரியான சமூகப் பார்வையை நாம் அனைவரும் பெற்றிருக்க வேண்டியது எமது சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமானது. அந்த வகையில் இந்த நூலகம் இத்தகைய சமூகப் பொறுப்பைச் செய்ய முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது.

## எனது பேனா

எனது
பேனா கூரானது
எனது
கைகளில் உள்ள
துப்பாக்கியைப்போல.
எனது கைகள்
நாளை ஓயலாம்.
அன்றி . . . .ஒடியலாம்.
ஆனால்
எனது பேனாவோ
ஓயப்போவதில்லை
எனது துப்பாக்கியைப் போல.
மன்னார் அனுபவத்தின்பின்
எனது பேனா கூரானது.
கைகளிலுள்ள
துப்பாக்கியையும் விட
எனது பேனா கூரானது.

கப்டன் வானதி

# ஆனை கட்டிய அரியாத்தை

பண்டார வன்னியனின் மூதாதையார்களில்ஒருவரான சின்ன வன்னியன் ஆட்சி புரிந்த காலம் அந்தக் காலம். நாட்டு மக்கள் எந்தக் குறையுமின்றி அமைதியாகவும், சந்தோசமாகவும் தமது சுற்றம், உறவு, பிள்ளைகளுடன் வாழ்க்கை நடத்தி வந்தனர்.

திடீரென ஆண்டான் குளத்தை அடுத்துள்ள கண்டல் காட்டில் புயல்போல புகுந்தது ஒரு யானை. அது பதினாறு அடி உயரமுள்ளது. மலையைப்போன்றது அதன் அமைப்பு. அந்த யானை மதங்கொண்டு அக்கிராம மக்களை ஆட்டிப்படைக்கத் தொடங்கியது.

அந்த யானையின் வெறித்தனத்தால் வயல்கள் எல்லாம் நாசமாகின. தென்னை, பலா, பனை போன்ற கனிமரங்கள் சின்னபின்னமாகின. குவித்த நெற்போரையெல்லாம் யானை தின்று தள்ளியது. கொட்டில்கள், குடில்கள் எல்லாவற்றையும் பிடுங்கி எறிந்தது. மனிதரைக்கூட அது விட்டுவைக்கவில்லை. அதனிடம் அகப்பட்டு மாண்ட குடிமக்களின் எண்ணிக்கையோ கணக்கில் அடங்காது.

யானையின் அட்டகாசங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் ஓடோடி வந்து தம் மன்னனான சின்ன வன்னியனிடம் முறையிட்டனர்.

மன்னன் மக்களுக்கு ஆறுதல் கூறி, அந்த யானையைப் பிடிப்பதாக உறுதியளித்து அனுப்பியதோடு யானையைப் பிடிக்கும் முயற்சியிலும் இறங்கினான்.

நாட்டிலுள்ள யானைப் பாகர்க்ள் அனைவரும் வரவழைக்கப்பட்டனர்.

மன்னன் கட்டளையைப் பிறப்பித்தான்

ஆனால் பணிக்காரர்களோ ''அரசே! அந்த யானையை அடக்கவென்று சென்று இறந்தவர்கள் பலர். யானையைக் கண்டு மட்டும் பயந்து வந்தவர்கள் பலர். அந்த யானையை மட்டும் எங்களால் பிடிக்க முடியாது. எம்மை மன்னிக்கவேண்டுமையா'' என்று மறுத்துவிட்டனர்.

''யானையின் கொடுமைகளைத் தாங்காது என்னிடம் வந்த மக்களிடம் யானையைப் பிடிப்பதாக உறுதி கூறிவிட்டேன். கட்டாயம் பிடித்தே ஆகவேண்டும். உங்களில் யார் வீரனென்று கூறுங்கள். அவன் மட்டும் சென்று யானையைப் பிடிக்கட்டும்'' என்றான் சின்னவன்னியன்.

''அந்த யானையைப் பிடிக்கும் ஆற்றல் உடையவன் இந்த வேலப்பணிக்கன்தான். எங்கள் எவராலும் முடியாது அர......''

என்று ஒரு பாகன் சொல்லி முடிக்குமுன்,

''ம் வேலப்பணிக்கனா? இவனா இந்த யானையைப் பிடிக்கப்போகின்றான்? இவன் வெறும் கோழை. வேணுமெண்டா இவன்ர மனைவி அரியாத்தைதான் அந்த யானையைப் பிடிப்பாள்'' என்று இடைமறித்தான் நீலப்பணிக்கன்.

நீலப்பணிக்கன் வேறு யாருமல்ல. அரியாத்தையின் மைத்துனன். அரியாத்தையைத் திருமணம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு இருந்தவன். ஆனால் அரியாத்தையின் பெற்றோரோ அதற்குச் சம்மதிக்கவில்லை. அதனால் வெட்கமடைந்தவன் எந்த வழியில் வேலப்பணிக்கனைப் பழிவாங்கலாம் எனக் காத்திருந்தான். இப்போது எல்லோர் முன்னிலையிலும் அவனை அவமானப்படுத்தினான்.

அவமானம் தாங்காது வீடு திரும்பிய வேலன் படுக்கையில் போய் விழுந்தான். சாப்பிடக்கூட மனம் இடங்கொடுக்கவில்லை.

கணவனின் செயல் அரியாத்தைக்குப் புதிதாக இருந்தது. கணவனிடம் சென்று ''என்னப்பா இப்பிடி இருக்கிறியள்? என்ன நடந்தது? மன்னர் என்ன சொன்னவர்?'' என்று ஆதரவுடன் விசாரித்தாள்.

''அரியாத்த, யானையைப் பிடிக்கிறதுக்கு மன்னர் உத்தரவுப்படி என்ன எல்லாரும் தெரிவு செய்தாங்க. ஆனா உன்ர மச்சான் என்னக் கோழையெண்டும், என்னால யானையைப் பிடிக்க ஏலாது எண்டும் சொன்னான்.''

''அவன் விசரன். அவன் சொன்னதுக்கு நீங்க ஏன் கவலைப்படுகிறியள்?''

''அவன் என்னச் சொன்னதால நான் கவலைப்படயில்ல. 'இவனால முடியாது. வேணுமெண்டா இவன்ர மனைவி அரியாத்ததான் அந்த யானையைப் பிடிக்க வேணும்' எண்டு எல்லோருக்கும் முன்னால உன்ர பெயர அவமானப்படுத்திப்போட்டான்.''

''அப்படியோ சொன்னான்? மன்னனுக்கு முன்னால என்ன அவமானப்படுத்தினதுக்காக அந்தயானையை நானே போய்ப் பிடிச்சுவாறன்.''

''வேண்டாம் அரியாத்த. ஆண்களாவ பாகர்களாலேயே முடியாதது உன்னால முடியாது. நான் போறன்.''

''எனக்கு வந்த அவமானத்த நீக்கவேணுமெண்டா நான்தான் அந்த யானையைப் பிடிச்சு வரவேணும். தயவு செய்து எனக்கு அனுமதி தாங்கோ.''

வேலப்பணிக்கனிடம்விடை பெற்றுக்கொண்டு அரியாத்தை யானை நிற்பதாகக் கூறப்பட்ட இடத்தை நோக்கிக் கயிற்றுடன் சென்றாள்.

அரியாத்தை யானை பிடிக்கச் சென்ற கதை நாடெல்லாம் பரவியது. ''ஆம்பிள்ளையளாலேயே பிடிக்க ஏலாத யானையை இவா பிடிக்கப்போறாவாம்''

உலகமங்கை

''இவாவின்ர பிணம் கூட எடுக்க ஏலுமோ தெரியாது.'

"தானாச் சாவத்தேடிப் போகுது விசர்ப்பிள்ளை.''

இப்படியாக ஊரில் பலவாறான கதைகள் பரவலாகப் பேசப்பட்டன.

காட்டில் அலைந்து திரிந்து அந்த மத யானையைக் கயிறு போட்டுப் பிடித்த அரியாத்தை, அந்த் யானை மீதே ஏறி அரண்மனையை நோக்கி வந்தாள்.

யானை போட்ட பிளிறல் சத்தம் அரண்மனை வரை கேட்கிறது. அரியாத்தை யானையைப் பிடித்த கதை காட்டுத் தீ போலப் பரவியது. அரியாத்தையை வரவேற்பதற்காக அரண்மனை விழாக் கோலம் பூண்டது. பட்டத்து அரசியோ அந்த யானையை தனது பட்டத்து யானையாக்கும் ஆவலோடு காத்திருந்தாள்.

ஆனால் நீலப்பணிக்கனோ...? அவனது வஞ்சக மூளை வேறுவிதத்தில் வேலை செய்தது.

''எங்களால முடியாதத இவள் செய்யிறதோ? இதன் மூலம் வேலனைக் கொல்லலாம் என்றால், இவள்அதை கெடுத்து விட்டாளே. இவளுக்குச் சரியான பாடம் படிப்பிக்கிறன் பார்'' என்று கறுவியவன், அரியாத்தையைக் கொல்லும் சதியோடு தன் மனைவியிடம் சென்றான்.

தனது மனைவியிடம் நஞ்சுப் பொடியைக் கொடுத்து அதை எப்படியாவது வெற்றியோடு திரும்பி வரும் அரியாத்தையின் உடையில் பூசும்படி சொன்னான். அவளும் அதை வாங்கிக் கொண்டாள்.

யானை மேல் வந்த அரியாத்தையை விழாக்கோலம் பூண்ட அரண்மனையும், மன்னனும், மக்களும் மங்களமாக வாழ்த்தி வரவேற்றனர்.

மன்னன் முன் தலை வணங்கிய அரியாத்தை, அரண்மனைக்கு அருகிலுள்ள 'அத்தி' மரத்தில் யானையைக் கட்டிவிட்டு மன்னர் முன் வந்தாள்,

மன்னன் அவளை அழைத்து ''இன்றிலிருந்து நீ ''வேழம் படுத்த வீராங்கனை'' என்று அழைக்கப்படுவாய்'' என்று புகழாரம் சூட்டினார்.

அரசியோ, அவளது வீரத்தைப் பாராட்டி விலை மதிப்பற்ற பொன்னாடை போர்த்திமகிழ்வித்தாள். மகிழ்வித்தோடு நில்லாது விருந்துக்கழைத்து விருந்தும்வைத்தாள்.

விருந்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பிய அரியாத்தையை நீலப்பணிக்கனின் மனைவியான நீலகேசரி இடைமறித்து, பாராட்டு வழங்குவதுபோல் அரியாத்தையின் ஆடையைத் தொட்டு தனது வேலையைச் சரியாகச் செய்துமுடித்தாள்'

ஏதும் அறியாத அரியாத்தையோ நீலகேசரியிடம் விடைபெற்று வீடு நோக்கிச் சென்றாள். அரியாத்தையின் தலையோ சுற்றுகிறது. மயக்கம், மயக்கமாக வந்தது.

அரண்மனையில் இருந்துவந்து தனது கணவனது மடியிலேயே உயிர்விட்டாள் அரியாத்தை.

இதுதான் அரியாத்தையின் கதை.

'அடங்காப் பற்றெனப் புகழ்சூடி, யாருக்கும் அடங்காத வன்னியர்களினாலே ஆட்சி செய்யப்பட்ட வன்னி மண்ணிலே வளர்ந்து, வன்னி மண்ணின் பெருமைக்கே தன் வாழ்வை அர்ப்பணித்த அரியாத்தை, குமுழமுனை, அளம்பில், செம்மலை ஆகிய இடங்களின் இடையிலே அமைந்துள்ளதாகிய 'அதிரியங்கோட்டில்' தன் கணவனுடன் வாழ்ந்ததாக' வேழம் படுத்த வீராங்கனை என்ற நாட்டுக் கூத்தை எழுதிய அரியான் பொய்கை கை. செல்லத்துரை அவர்கள் தன் முகவுரையிலே குறிப்பிட்டுள்ளார்.

இவரது நாட்டுக் கூத்திலே யானையைப் பிடிப்பதற்காக அரியாத்தை பாரிய மந்திரக் கோலும் அங்குசமும் கயிறும் கொண்டு சென்றதாகக் கூறப்பட்டுள்ளது. வன்னி மண்ணிலே இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் சில முதியவர்களிடம்,

''யானையை அரியாத்தை எவ்வாறு பிடித்திருப்பாள் என்று நினைக்கிறீர்கள்?''

என்று கேட்டபோது,
''மந்திரம் போட்டுத்தான் பிடித்திருக்க வேண்டும்''
என்றார்கள்.

ஒருவராலுமே பிடிக்க முடியாத மத யானை ஒன்றை எப்படி அரியாத்தை அடக்கினாள் என்பதில் எல்லோருக்கும் குழப்பமிருந்தாலும், யானையை அரியாத்தை பிடித்தாள் என்பதை எல்லோருமே ஒப்புக் கொள்கின்றார்கள்.



அரியாத்தையின் மரணம் எவ்வாறு நடந்தது என்பதற்கும் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன.

நீலப்பணிக்கனின் சதிதான் காரணம் என்று 'வேழம் படுத்த வீராங்கனை' என்ற நாட்டுக் கூத்து நூல் கூறுகின்றது.

எமது முதியவர்களில் பலரும் பலவிதமாகக் காரணம் சொல்கின்றனர்.

குறிப்பாக ஒருவர் அரியாத்தையைப் பற்றிக் கூறும்போது யானையைப் பிடித்து வந்து பரிசு பெற்ற அரியாத்தை 'தனது கணவனுக்குக் கிடைக்கவேண்டிய பரிசும் பெயரும் புகழும் தனக்குக் கிடைத்துவிட்டதே. அதனால் தனது கணவனுக்கு இழுக்கு ஏற்பட்டுவிட்டதே' என்றுஎண்ணி தானாகவே வெற்றிலையில் 'நஞ்சை' வைத்துச் சாப்பிட்டு இறந்ததாகக் கூறுகின்றார்.


இன்னொருவர், யானை பிடித்துக் கட்டிய மறு நாட் காலை பார்த்தபோது யானை கட்டியிருந்த மரத்திலே அரியாத்தையின் உடல் கழுத்தில் சுருக்கிட்டநிலையில் தொங்கிக்கொண்டு இருந்ததாகவும், அவள் தானாகவே தற்கொலை செய்து கொண்டாளோ அல்லது கொலை செய்யப்பட்டாளோ தெரியாது என்றும் சொல்கின்றார்.

எமது இளைய தலைமுறையினரைக் கேட்டபோது. அவர்களில் பலருக்கு அரியாத்தை என்ற பெண் ஒருவர் இருந்தார், அவர் இப்படி ஒரு செயலைப் புரிந்தார் என்பதே தெரியவில்லை.

ஆனாலும் அரியாத்தையின் வரலாறு சரியாக் வரையறுத்துக் கூறக் கூடியதாக இல்லாவிட்டாலும், பண்டார வன்னியனுக்கு முன் ஆட்சி புரிந்த அவன் முன்னோர்களில் ஒருவனான சின்ன வன்னியன் காலம் என்பது வரலாறு ஒப்புக்கொண்ட உண்மையாகும் அவன் காலம் பதினேழாம் நூற்றாண்டெனக் கூறலாம்.
எமது தமிழினம் அந்தக் காலத்தில் இருந்தே வீரமரபுடைய இனமாக், வீரசாதனை புரிகின்ற இனமாகத்தான் இருந்து வருகின்றது. ஆனால் அவர்களைப் பற்றிக் கூறும் வீரகாவியங்கள் மிகமிகக் குறைவு. அவர்கள் வீரசெயல்கள் புரிந்த இடங்கள் வரலாற்றுச் சின்னங்களாகப் போற்றிப் பாதுகாக்கப்படவில்லை. அரியாத்தை யானையைக் கட்டியதாகச் சொல்லப்படும் அத்திமரம் இருந்த இடம் எதுவென்று ஒருவருக்குமே தெரியவில்லை. அந்த இடத்தில் ஒரு நினைவுச் சின்னம்கூட இல்லை. மாறாக அழிந்து, காடுகள் வளர்ந்து போய், பற்றைகளும் முட்களுமாக இருக்கின்றது.
அழிந்துபோன எமது வீர வரலாறுகள் எல்லாவற்றுக்கும் புத்துயிர் கொடுத்து. உலவவிடவேண்டிய பெரும் சமுகப் பொறுப்பு ஒன்று எம் முன் இருக்கின்றது. அரியாத்தையைப்போல இன்னும் எத்தனையோ பெண்களின் வீர வரலாறுகள் காலவெள்ளத்தால் அள்ளுண்டு போயிருக்கலாம். ஆனால் அந்த வரலாறுகளைத்தேடி எடுத்து, எமது அடுத்த தலைமுறைகளிடம் சமர்ப்பிக்க் வேண்டிய கடமைஎல்லோருக்கும்உரியது.

# நான்காம் ஆண்டு நினைவில்

# மேஜர் சோதியா



கப்டன் சந்தியாவுடன்
மேஜர் சோதியா

1985இல் இந்தியாவில் ஒரு பயிற்சிப் பாசறையில்...... அம்மாவைப் பிரிந்து வந்து சில நாட்கள், கடல் பயணத்தால் உண்டான பதற்றம், பயிற்சி எடுப்பதற்காக நாம் அனுப்பப்பட்ட மலைப்பிரதேசம், இந்த மூன்றையுமே நான் இதற்கு முன்னர் சந்தித்திருக்கவில்லை, இந்தத்தாக்கத்தின் விளைவாக எனக்குக் காய்ச்சல் வந்து விட்டது.

எமது பயிற்சிப் பாசறையில் அமைக்கப்பட்டிருந்த ஒரு கொட்டிலுள் கம்பளிப் போர்வையால் போர்த்தபடி "அம்மா, அம்மா" என முனகியவாறு படுத்திருந்தேன். மெதுவாக ஒரு கை என் போர்வையை விலக்கி, உடல் வெப்ப நிலையைப் பரிசோதிப்பதற்காக என் கழுத்தில் பதிந்தது. கண்களைத் திறந்து பார்த்தேன். ஒரு அக்கா என் முன் நின்றார்.

"என்னம்மா செய்யுது? என்ன. சாப்பிட்டீங்களம்மா? காய்ச்சல் தானே பிள்ளைக்கு? இப்ப மருந்து தாறன். காய்ச்சல் உடனே பறந்து போடும்"
என்றார்.

அன்பான அம்மாவாகவும் கனிவான வைத்தியராகவும் நான் அன்று (மகளிர் படையணியின் முதலாவது தளபதியான) மேஜர் சோதியாக்காவைச் சந்தித்தேன்.

பயிற்சிப் பாசறையில் இருந்தோரில், நான் உட்பட பெரும்பாலானோர் வயதில் சிறியவர்களாக இருந்தோம். அந்தச் சிறியவர்களுக்கு சோதியாக்கா அம்மாவாக விளங்கினார். நாம் எப்போதும் சோதியாக்காவைச் சுற்றி நின்று அவருக்கு கரைச்சல் கொடுத்துக்கொண்டு நிற்போம். அவரின் மடியில்கூடப் படுத்திருப்போம். ஒரு நாள்கூட எங்கள் சோதியாக்கா எங்கள் மேல் சினந்து விழ்ந்தது கிடையாது.

பயிற்சிப் பாசறையில் எமக்கு நீண்ட நேரம் பயிற்சிகள் நடக்கும். ஓடுவதில் இருந்து கயிறு ஏறுதல், மலை ஏறுதல் என்றெல்லாம் பயிற்சி நடக்கும். பயிற்சிகள் முடிந்ததும் எங்களது கொட்டில்களை நோக்கி ஓடிவருவோம். கடுமையான பயிற்சி காரணமாக உடம்பெல்லாம் பச்சைப்புண்ணாக நோகும். வந்ததும் வராததுமாக கொட்டில்களுக்கு முன்னால் உள்ள மரங்களின் கீழ் வீழ்ந்து படுத்துவிடுவோம். சிலர் கிடைக்கின்றகொஞ்சநேரத்தில் நித்திரை கொண்டும் விடுவார்கள். இவ்வளவு பயிற்சிகளையும் எங்களுடன் சேர்ந்து எடுத்த சோதியாக்கா படுப்பாரா? இல்லை. அவருக்கு படுப்பதற்கோ, களைப்பாறுவதற்கோ நேரமே கிடையாது. எங்கள் பயிற்சியாளர்களில் காய்ச்சல், கால்நோ, கைநோ, வயிற்றுக்குத்து என்றும், கழுத்து, கால், கை உளுக்கி விட்டது என்றும் படுத்திருப்பவர்களுக்கு ஓடி ஓடி வைத்தியம் செய்வார். நோ, உளுக்கு என்றவர்களுக்கு நோஎண்ணெய் போட்டுத் தேய்ப்பார். அதே நேரம் அவரின் நெற்றியால் வியர்வை சிந்தும். தனது கையால் அந்த வியர்வையை வீசி எறிந்து விட்டு தனது கடமையை தொடர்வார். அதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு கொட்டில் கொட்டிலாகச் சென்று, முதல் நாள் வருத்தமென்று படுத்திருக்கின்ற தோழிகளுக்கு உணவு கொடுத்து, மருந்து கொடுத்து விட்டு விரைந்து வருவார். சோதியாக்காவின் நடை மிகவும் வேகமானது; ஆள் நல்ல உயரம். கால்களும் நீளமானவை. கால்களை எப்போதும் எட்டி எட்டி வைத்து வேகமாகத்தான் நடப்பார்.

நான் சோதியாக்காவின் வேகத்தையும் அவர் வியர்வை சிந்திச் சிந்தி தோளில் பயிற்சிக்குரிய மரத் துப்பாக்கியுடன் சகதோழிகளுக்குச் செய்யும் சேவையையும் பார்த்துவிட்டு எனது தோழி கப்டன் ரஜனியிடம் கூறுவேன். "பாவமடி சோதியாக்கா". அவளும் "ஓமடி" என்பாள்.

உடனடியாக செய்யவேண்டிய முதலுதவி சிகிச்சைகள் முடிந்ததும் சோதியாக்கா மருத்துவத்துக்காக ஒதுக்கப்பட்ட கொட்டிலுக்குள் போவார். அங்கே மருந்து எடுப்பதற்கு வரிசையில் நிற்பார்கள். நாங்கள் எல்லோரும் போய் சாப்பிட்டு விட்டு வருவோம். மருத்துவக் கொட்டிலுக்குள் போய் எட்டிப் பார்ப்போம். சோதியாக்கா மருந்து கொடுத்துக்கொண்டிருப்பார். "அக்கா வகுப்பு தொடங்கப்போகுது. நீங்கள் சாப்பிடவில்லையா? போய்ச் சாப்பிடுங்கோ அக்கா" என்போம். "இஞ்சை நிற்கின்ற இவ்வளவு பேருக்கும் மருந்தைக் குடுத்து விட்டு போறேன்" என்பார். "அப்ப நாங்கள் சாப்பாடு எடுத்து வரவா அக்கா?" என்றால், "அடிவாங்காமல் போங்க பார்ப்போம்" என்பார். (எப்போதுமே சோதியாக்கா தனக்குரிய பணிகளை மற்றவர்களைக்கொண்டு ஒரு போதும்செய்விக்கவேமாட்டார்) நாங்கள் சோதியாக்கா சொன்னதையும் மீறி சாப்பாடு எடுத்து வந்து கொடுப்போம். அந்தச் சாப்பாட்டைச் சாப்பிட நேரமில்லாது வைத்து மூடிவிட்டு வருவார். சில வேளைநின்ற நிலையில் சாப்பிட்டு விட்டு, வகுப்புக்கு வருவார். எப்போதும் சோதியாக்கா கடைசியாக வகுப்புக்கு வந்து ஆசிரியரிடம் மன்னிப்பு கேட்டு, வகுப்பறையில் இருப்பார். வகுப்பு நடந்து கொண்டிருக்கும்போதுகூட ஆசிரியரிடம் சொல்லிவிட்டு கொட்டில்களில் வருத்தமாக படுத்திருப்பவர்களைச் சென்று பார்த்துவிட்டு வருவார்.

சோதியாக்கா எங்களுடன்தான் பயிற்சி எடுத்தார். எங்கள் அனைவருக்கும் இருந்த அதேகளை, உடல் அலுப்பு அனைத்தும் அவருக்கும் இருந்தது தான். ஆனால் அவர் படுத்தாரா? களைப்பாறினாரா? ஓய்வு எடுத்தாரா? இல்லை. இல்லவே இல்லை. அப்போதெல்லாம் நாங்கள் சோதியாக்காவைப் பார்த்து "பாவமடி சோதியாக்கா" என்று கதைப்போம். அவ்வளவுதான். அதற்கு மேல் யோசித்துப் பார்க்க எங்களுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. சிந்தித்துப் பார்க்கவும் முடியவில்லை. இப்போது, அந்த சோதி வடிவமான சோதியாக்காவையும் ஓய்வு உறக்கமின்றி அவர் செய்த வேலைகளையும் சேவைகளையும் நினைக்கின்றபோது உண்மையிலேயே என் கண்கள் தானாகவே நீரைச் சொரிகின்றன. எப்படி சோதியாக்காவால்

ரதி

தன்னை வருத்தி இப்படி எல்லாம் செய்ய முடிந்தது? 'ஒரு உண்மையான விடுதலை வீராங்கனை தன்னலமற்றவள்' என்பதை எங்கள் சோதியாக்கா தன் வாழ்க்கை மூலம் நிருபித்துக் காட்டிவிட்டாள்.

நாங்கள் தமிழீழத்துக்கு வந்த பின்னர் வன்னிப் பிராந்தியத்தில் ஒரு அடர்ந்த காட்டின் நடுவிலே தளம் அமைத்திருந்தோம். அங்கே எமக்கு ஓர் கிணறு தேவைப்பட்டது. நாங்களே கிணற்றை வெட்டினோம். அந்த நேரம் எமக்கு உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது: கஞ்சியையும், ரொட்டியையும் சாப்பிட்டுச் சாப்பிட்டுக் கிணறு வெட்டினோம். தண்ணீரோ வருவதாகத் தெரியவில்லை. இதனால் மிகவும் சோர்வடைந்து போன நாங்கள் அந்தக் கடினமான சூழலில் தொடர்ந்து நின்று பிடிக்கும் வலுவை இழக்கத் தொடங்கினோம். அதன் விளைவாக தெளிவில்லாத கதைகளை கதைத்தோம். இதை அவதானித்த சோதியாக்கா கதைத்த எங்களனைவரையும் கூப்பிட்டு, எங்களின் மனம் தெளிகின்ற அளவுக்கு போராட்டத்தைப் பற்றிய விளக்கம் தந்தார். நாங்கள் சோதியாக்காவின் நீண்ட விளக்கத்தினால் புது வேகம் பெற்று புத்துணர்ச்சியோடு மீண்டும் சோதியாக்காவோடு சேர்ந்து நின்று கிணற்றைத் தோண்டி தண்ணீரையும் கண்டோம். துள்ளி எழுந்து சோதியாக்காவின் தோளில் தொங்கிக்கொண்டு நின்று கூக்குரலிட்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்து குதூகலித்தோம்.

காட்டில் இருக்கும் காலத்தில் எங்களுக்குரிய உணவுகளை நீண்ட தூரத்தில் இருந்து மூடைகளாக தலையிலும், தோளிலும் சுமந்துகொண்டு வந்து தளத்தில் சேர்த்தோம். மூடைகளைச் சுமந்து வர எல்லோருமே செல்வோம். சோதியாக்காவும் எங்களுடன் வருவார். அரிசி, மா, சீனி என்றும் உப்பு புளி, பருப்பு என்றும் மூடை மூடையாகச் சுமந்து வந்தோம். சோதியாக்கா எல்லோருடைய தலைகளிலும் பாரங்குறைந்த மூடைகளைத் தூக்கி வைத்து விடுவார். சோதியாக்கா மிகவும் உயரம் என்றதால் எல்லோரும் பொதிகளைத் தூக்கித் தலையில் வைக்கச் சோதியாக்காவையே அழைப்போம். மிகவும் களைத்தால் வரும் வழியில் மூடைகளைக் கீழே போட்டுவிட்டு இளைப்பாறுவோம். சோதியாக்கா வந்து மீண்டும் தூக்கி விடுவாள். தளத்துக்கு வந்ததும் மூடைகளைப் போட்டு விட்டு "கழுத்துக்கை பிடிக்குது. தோள் நோவுது" என்றபடி மரங்களின் கீழ் அமர்ந்து இரண்டு மூன்று பேராக கதைப்போம். சோதியாக்கா ஒரு குழாமரத்தின் கீழ் இருப்பார். சோதியாக்காவுக்கு அந்த மரத்தின் அமைவு சரியான விருப்பம். அதனால் அந்த மரத்தின் கீழேதான் வழமையாக இருப்பார்.

ஒருநாள் நானும் கப்டன் ரஜனியும் உப்பு மூடைகள் தூக்கி வந்தோம். இரண்டுபேருக்கும் கழுத்துக்குள் உளுக்கிவிட்டது. விக்கி விக்கி அழத்தொடங்கினோம். எங்களுக்கு எப்போதாவது ஏதாவது துன்பம் என்றால் சோதியாக்காவுக்கு அருகில்தான் இருப்போம். அன்றும் அதே மாதிரித்தான் கப்டன் ரஜனி சொன்னாள். "நாங்கள் துவக்கு எடுத்து ஆமியோட சண்டை பிடிக்க மட்டும்தான் வந்தனாங்கள். இப்படி மூட்டை தூக்கவேணும், கிணறுவெட்ட வேணும் எண்டு தெரிந்திருந்தா வந்திருக்கவேமாட்டம்" என்றாள். அதற்கு நானும் "ஓமடி நானும் அப்படி நினைச்சுத்தான் வந்தனான்" என்றேன். எங்களின் இந்தஉரையாடலைஅளமேலே தொடராமல் இடைநிறுத்தினார்சோதியாக்கா. "இஞ்ச நீங்கள் ரெண்டுபேரும் ஆகச் சின்னப்பிள்ளைகள் மாதிரி கதைக்காதையுங்கோ. போராட்டம் எண்டா கஸ்ரம்தான். முள்ளும், கல்லும் நிறைஞ்ச பாதையில போய்த்தான் நாங்க தமிழீழம் பிடிக்க வேணும்" என்றார். நான்உடனே சொன்னேன். "ஓமக்கா நீங்க சொல்லுறது சரிதான். நாங்கள் மூடை தூக்கப் போற ஒற்றையடிப் பாதையில காலில குத்துற கல்லும் முள்ளும் எங்களோடையே சேர்ந்து வருது. அதோட பெரிய முள்ளெல்லாம் எங்களைப் பாவம் பார்த்து போக வேண்டாமென்டு பிடிச்சு பிடிச்சு இழுக்குதுகள்" என்றேன். உடனே சோதியாக்காவுக்கு கோபத்தில் முகம் சிவந்தது. "நான் சீரியசாக் கதைக்கிறன், நீ பகிடி விடுறாய் போ, எனக்கு முன்னால் நிற்காதே" என்றார் "இல்லையக்கா இனிமேல் நான் இப்பிடிப் பகிடிவிடமாட்டேன்" எனக் கெஞ்சியபோது தொடர்ந்து எங்களுக்குப் போராட்டத்தைப் பற்றி விளக்கமளித்தார்.

" உதாரணமாக நாங்க வீட்டில இருக்கிற நேரம் பள்ளிக்கூடத்தில முதலாம் வகுப்பு படிச்சுப்போட்டு திடீரெண்டு பத்தாம் வகுப்புக்குப் போறதில்லை. படிப்படியா ஒவ்வொரு வகுப்பாப் படிச்சு முன்னேறிப் போவம். அதே மாதிரித்தான் எங்கட போராட்டமும். இப்ப நடந்து போய்த் தலையில மூடை தூக்கிறம். கொஞ்சக் காலத்தில ட்ராக்டரில கொண்டு வருவம். இப்படியே நாங்க வளர்ச்சி அடைஞ்சு எங்கடை தமிழீழத்தை அடைவம். அதுக்கிடையில நீங்க குழப்பமான கதைகளைக் கதைச்சு உங்களை நீங்களே குழப்பாதேங்கோ"என்று தொடங்கி ஒரு நீண்ட விளக்கத்தை எனக்கும் ரஜனிக்கும் சோதியாக்கா கூறினார். சோதியாக்காவின் விளக்கத்தால் நாங்கள் மிகவும் தெளிவடைந்தோம். பின் நானும் ரஜனியும் உணவு மூடைகளை சுமப்பதிலும் கிணறு வெட்டுவதிலும் முன்னுக்கு நின்றோம். இதற்கு முழு காரணமாக இருந்தவர் எங்களின் சோதியாக்காதான்.

முகாமில் இருக்கும் போது, காடுகளில் பாசறை அமைத்து வாழ்ந்தபோது நாங்கள் எங்களுக்குள் ஒருவருடன் ஒருவர் நன்றாகச் சண்டை பிடிப்போம். சண்டை பிடித்த பின் மூன்று நான்கு நாட்களுக்குக் கதைக்காமல் ஒருவரை ஒருவர் கண்டால் முகத்தைத் திருப்பிக் கொண்டு நிற்போம். இயக்கத்தில் இணைந்து அப்போது கொஞ்சக்காலம் தான். வீட்டுப் பழக்கங்கள் பெரும்பாலும் அப்படியேதான் இருந்தன. வீட்டில் தம்பி, தங்கையுடன் குத்துப்பட்டு, கூத்தாடி, சண்டை பிடித்துச் சண்டை பிடித்துப் பழகிப் போனதுதானே. இயக்கத்தில் வந்ததும் ஒரு கூட்டு வாழ்க்கையைச் சந்தித்தோம். இந்த வாழ்க்கையை இதற்கு முன் எப்போதுமே சந்தித்திருக்கவில்லைத் தானே. வீட்டில் ஐந்து ஆறு பேருடன் இருக்கும்போதே குத்துப்பட்டு சண்டை பிடித்த நாங்கள், நூற்றுக்கணக்கானவர்களுடன் ஒன்றாக இருந்தால் எப்படி இருப்போம்?

(07ஆம் பக்கம் பார்க்க)




பொன் கொழிக்கும் வயல் நிலங்கள். அதனுடன் மலைகளும், அருவிகளும் என தன்னகத்தே செழிப்புறக் கொண்டது தென் தமிழீழம்.

அடர்ந்த காடு. சிள்வண்டின் இரைச்சலை இடையிடையே தடுக்குமுகமாக ஓசையிடும் வன விலங்குகள். அவற்றையும் மீறி எதிரியின் எறிகணைகள், துப்பாக்கிச் சன்னங்கள்.

இவற்றுக்கு மத்தியில் தற்காலிகமாக அமைக்கப் பெற்ற பாசறை ஒன்றில் வளர்மதி. அவள் கையில் ஓர் கடிதம். கடிதத்துக்குரிய போராளி அவள் முன்.

''இந்தாம்மா உன்ட அப்பர் செத்துப் போச்சி எண்டு காகிதம் வந்து இரிக்கு'' என்றபடி கொடுக்க, பெற்றுக் கொண்ட போராளி மௌனமாகக் கண்ணீர் விடுகிறாள். காரணம் அவள் மட்டுமல்ல, அவளைப்போல அனைத்துப் போராளிகளுமே இயக்கத்தில் தம்மை இணைத்துக்கொண்ட பின்னர் பெற்றோரின் நிலையைச் சிறிதளவுகூட அறியாத நிலையிலேயே இருந்தனர்.

அழுதவாறு தன்முன் நிற்கும் அப்பிள்ளையைப் பார்த்து ''படிச்சிட்டுக் கத்து'' என்று முகத்தில் சிறிதளவு கூட மாறுதலில்லாமல் கடுமையாகவே பதிலளிக்கின்றாள் வளர்மதி.

கடிதம் பிரிக்கப்பட, அதில் பல மாதங்களின் பின்னர் தந்தையின் சுகச்செய்தியே தனக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதைக் கண்டவுடன் அழுகையும் சிரிப்புமாகக் காட்சி தருகின்றாள் அப்போராளி.

வளர்மதியின் இதழிலும் சிரிப்பு வருகின்றது. ''பாசத்தைப் பார். ஒழுகுது. வந்திட்டினம் போராட. உன்னைச் சோதிக்கத்தான் இப்புடிச் சொன்னனான். என்னதான் இடைஞ்சல் வந்தாலும் நாங்க கெலங்கக்கூடாது. கவலைப்படுறதுக்காம்மா நாங்க இயக்கத்தில சேந்தனாங்க?'' என்றவாறு எழுந்து கொள்கின்றாள்.

மேஜர் வளர்மதி! அவளது இயற்பெயர் சாந்தி. பெயருக்கும் அவளுக்கும்தான் என்ன பொருத்தம்! அமைதியின் உருவம். கண்களில் ஒருவித ஒளி. உறுதியான நீண்ட உடல், மனமும் கூட. கலகலப்பான சுபாவம் கொண்டவள்தான். ஆனாலும் அதற்குக் கூட ஒரு வரையறையை வகுத்துக் கொண்டவள். மக்களுடன் மகளாக, பெரியவர்களுடன் பணிவாக, சிறியவர்களுடன் அன்பாகப் பழகுவதற்கு ஏற்ப தன்னை மாற்றியமைத்துக் கொண்டவள்.

இராணுவ ஆக்கிரமிப்பினால் அழிவுற்று சாம்பல் பூத்த மேடாகக் காட்சியளிக்கும் பல ஊர்களில் ஒன்றான கண்ணகிபுரம் - தியாவட்டவான் பகுதியைத் தனது பிறப்பிடமாகக்கொண்டவள். காகிதத் தொழிற்சாலைக்கு மிகச் சமீபமாகவே அவ்வூர் அமைந்திருந்தது. ஒருபுறம் தமிழரின் குடியிருப்புக்கள், மறுபுறம் இசுலாமியக் குடியிருப்புக்கள் என அமையப் பெற்றிருந்தது.

முத்துப்பிள்ளை, செல்லத்துரையின் கடைசிப் பெண் இவள். 1970-06-01 இல் பிறந்தாள். ஒரு வயது நடக்கும் போது கொடிய நோயிடம் தந்தையைப் பறிகொடுத்தாள். இறப்புக்குப் பின்னர் குடும்பப் பொறுப்பைச் சுமந்து கொண்டாள். இவள் தமிழ் மகாவித்தியாலயத்தில் தனது கல்வியைப் பெற்றுக்கொண்டாள்.

நான்கு பெண் சகோதரிகளினதும் ஆறு ஆண் சகோதரர்களினதும் அணைப்பில் மிகவும் செல்லமாக வளர்ந்து வந்தாள் வளர்மதி. இவளின் குடும்பமே இயக்கத்துக்கெனத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டது.

இராணுவத்தினரால் புலிகளுடன் மோத முடியாத சந்தர்ப்பங்களில் பொதுமக்கள்தான் அவர்களுடைய பலிக்கடாக்கள் ஆயினர். நாள்தோறும் வெட்டுக்களும், சூடுகளும், கைதுகளும் .. தமது வெறி தீர்ந்த பின்னர் விலகுவார்கள்.

இவளின் குடும்பமும் பல துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது. சொந்தமான ஐந்து வீடுகள் எரிக்கப்பட்டன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. துன்பங்களின் படிகளில் தான் விடுதலையின் வேகம் உயரும் என்பதை சிங்கள ஆதிக்கம் உணர்ந்து கொள்ளாதது எவ்வளவு வேடிக்கையானது! ஒரு சகோதரன் முழு நேரமும் காட்டினுள் புலிகளுடனேயே இருந்து உதவி செய்தார். இரு ஆண் சகோதரர்கள் போராளிகளாக மாறினர். விடுதலையின் வேகத்தினைத் தாங்க முடியாத இராணுவம் காட்டிக் கொடுக்கும் கயவரின் துணையுடன் 1988 இல் ஒரு அண்ணனை வெட்டிக்கொன்றது. 1990இல், திருமணமான ஒரு அண்ணனைச் சிறையில் அடைத்தது. பெண்பிள்ளைகளின் நிலையை எண்ணிக் கலங்கிய தாய், இறகினுள் குஞ்சுகளை பொத்தி வைக்கும் தாய்க்கோழியைப் போல தன் பெண் குழந்தைகளுடன் காட்டுக்குள் ஓடி ஒளித்த நாட்கள் அனேகம். ஆனாலும் வளர்மதியின் போராட்டம் தொடர்பான செயற்பாடுகளை அத்தாய் கூட அறிந்திருக்கவில்லை. அவள் போராளியாக மாறிய பின்னரே அனைத்தையும் புரிந்து கொண்டாள். அடிக்கடி நிகழும் கலவரங்களினால் ஒன்பதாம் வகுப்புடன் தனது கல்வியை நிறுத்திய சாந்தி, தையல் கலையிலும் பாய் அடிப்பதிலும் தேர்ச்சி பெற்றாள். இவற்றின் நடுவிலும் அவள் பணி தொடர்ந்தது. போராளியாக இணைவதை விட போராட்டத்துக்குஆதரவாக ஊருக்குள்ளே உலாவுவது தான் அங்கே மிகவும் கடினமான காரியம். காட்டிக் கொடுக்கும் கயவர் கூட்டம் கழுகுக்கண்களுடனும் கையில் வாளுடனும் அலைந்து திரிந்து கொண்டிருந்தது. இவற்றின் நடுவிலும் அவள் பணியைத் தொடர்ந்தாள்.

## மேஜர் வளர்மதி



சாந்தி செல்லத்துரை
கண்ணகிபுரம், வாழைச்சேனை.
பிறப்பு: 1970-06-01
வீரச்சாவு: 1992-04-16

1988-08-08 அன்று சாந்தி வீட்டிலே இருந்த நேரம். துரோகக் கும்பலுடன் நுழைந்த சிங்களப்படை அவளை அடித்து நொருக்கியது. ''உண்ட கொண்ணன் எங்க'' எனக் கேட்டுக் கேட்டு அடித்தனர். எவ்வளவோ அடிகள் விழுந்தும் கூட அவர்களுக்குச் சாதகமான பதில் ஒன்று கூட அவளின் வாயில் இருந்து வரவில்லை. அக்கொடிய படை போகும் போது ''மறுகா வருவம்'' என்றபடி போனது.

செய்தி அறிந்து வீட்டுக்கு ஓடிவந்த தாய் வீங்கிய முகத்துடன் இருந்த தனது மகளை வாரி எடுத்து அணைத்துக்கொண்டாள். ஆனால் வளர்மதியின் உதடுகளோ, ''நான் இயக்கத்துக்குப் போபறன்'' என்ற சொல்லையே திரும்பத் திரும்பக் கூறியது. தனது நகைகளைக் கழற்றி தமக்கையின் குழந்தைக்குப் போட்டவாறு ''எனக்கிது தேவை இல்ல'' என்று கூறியவளை மறுநாளிலிருந்து காணவில்லை.

விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் ஐந்தாவது பயிற்சிமுகாமில் பயிற்சியைமுடித்துக்கொண்டவள். 1990ஆம் ஆண்டில் தனதுஒரு சிறுகுழுவுடன்தான் பிறந்த மண்ணில் ஒரு முழுமையான போராளியாகக் காலைப் பதித்தாள். அந்நேரத்தில் புதிய பெண்புலிகளும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். பயிற்சி முடிவடைந்தது. பிள்ளைகளுடன் பிள்ளையாகவும் அதேவேளை குழுக்களை வழிநடத்திச் செல்லும் தலைவியாகவும் செயற்பட்டாள்.

சிலகாலங்களின் பின் சகபோராளி ஒருத்தியுடன் ஊருக்குள் இறங்கி, தனது பிரச்சார வேலைகளை இரகசியமாக முடுக்கி விட்டாள். அதன் பின், பல பெண்கள் இயக்கத்தில் இணைந்தனர்.

மீண்டும் சிங்கள வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது. இரண்டாவது ஈழப் போர் ஆரம்பமானது. அவ் வேளையிலும் கூட மக்களின் எண்ணத்தினை அறியும் பொருட்டு ஊருக்குள் தனது பணியைச் சிலகாலம் தொடர்ந்தாள் வளர்மதி.

சண்டைகளின்போது இவள் பெரும்பாலும் குழுத்தலைவியாகவே சென்றாள். அடிக்கடி பிள்ளைகளை அழைத்து இயக்க நிலைப்பாட்டை விளக்கி, உறுதியாகச் செயற்பட வேண்டும் என்று ஒரு தாயைப் போல புத்திமதி கூறுவாள்.

''நான் எடுத்த பயிற்சியைப் போல சகல பயிற்சியும் தரணும் எண்டு ஆசை. நல்லா வளக்கணும் எண்டு நிறைய எண்ணி வைச்சிரிக்கன். கொஞ்சக் காலம் போகட்டும். வாகனம் ஓட்டக் கூடப் பழக்கித்தெருவன்'' என்று கூறுவாள். பொறுப்பாளராக இருந்தபோதிலும், பிள்ளைகளுடன் பிள்ளையாகக் கரப்பந்து விளையாடுவதிலும், நீச்சலடிப்பதிலும், நகைச்சுவைத் துணுக்குகள் கூறுவதிலும் இணைந்தே நிற்பாள். அவளின் அத்தகைய குணமே பிள்ளைகள் மத்தியில் பெரும்மதிப்பினை வளர்த்தது. என் எனும் முன்பு எண்ணெயாக வந்து நிற்கும் அளவுக்கு அவளிடம் பாசமும் பணிவும் கொண்டிருந்தனர்.

வளர்மதியின் உயிர்நண்பியாக விளங்கியவள் 2-ம் லெப். நிலா. இருவரின் உரையாடலிலும் நகைச்சுவை இழையோடும். சிந்தனைவயமான வரிகளும் இணைந்து காணப்படும்.

''நிலா, கொழுத்தித்தான் என்னை எரிச்சாலும் என்ர கொள்கையில இருந்து ஒரு நாளும் விலகமாட்டன். அது போலத்தான் எல்லாப் புள்ளைகளும் இருக்க வேணுமெண்டு விருப்பப்படுகிறன். எங்கட காலடி பெதிஞ்ச இடத்தில எங்கட ரத்தமும் உறைய நாங்க குடுத்து வெச்சவங்க'' என்று ஆழ்ந்த உணர்வுடன் கூறுவாள்.

நிலாவோ ''வளர்மதியக்கோ, நான்தான் முதல்ல சாவன். என்னைப்பத்தி எழுதுங்க என்ன?'' என்பாள்.

''போடி. நான்தான் சாவன்'' என்பாள் வளர்மதி. ஆனால் நடந்ததோ...

கள்ளிச்சையிலிருந்து வெலிகந்தை நோக்கிக் காவல் உலாச் செல்லும் சிறீலங்கா இராணுவ அணி மீது தாக்குதல் நடத்தவேண்டும் என்று திட்டம் தீட்டப்பட்டது. சில போராளிகளைக் கொண்ட குழுவுக்கு தலைவியாக வளர்மதி. அவர்களுள் ஒருத்தியாக நிலா.

சண்டைக்கெனச் செல்லும்போது தேவையான உணவுப் பொருள்களையும் கொண்டுதான் பயணம் தொடரும். கற்களும், முட்களும் நிறைந்த பகுதிகளையும், அருவிகளையும் மலைகளையும் கடந்து பயணம் தொடர்ந்து செல்லும். இத்தனை சிரமங்களின் மத்தியிலேதான் எதிரியின் மனோபலத்தைச் சிதைத்து புலிகள் போரிடுகின்றனர். நிலை எடுத்து இருக்கும் போது உடல்மேல் புழுக்கள் ஊரும். பாம்புகள் நெளியும். தொண்டை வரண்டு இருமல் வரும். அனைத்தையும் பொறுத்துக்கொண்டுதான் தயார் நிலையில் காத்திருப்பார்கள் புலிகள்.

இருநாட்கள் பயணம். உரிய இடத்தில் நிலை எடுத்த பின்னர் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இருபது நிமிட இடைவெளியில் எதிரியின் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. அதில் எல். எம். ஜி யும் அடங்கும். சிதறிய இராணுவம் ஓடுகின்றது. இறுதியில் விழுகின்றது. ஜீப்புடன் ட்ராக்டர் ஒன்றும் கைப்பற்றப்பட்டுச் சேதமாக்கப்பட்டன. இதில் நிலா வீரச்சாவினை அணைத்துக் கொண்டாள். நிலாவின் மார்பில் ரவையினால் ஏற்பட்ட காயத்தை வளர்மதியின் கை ஆறுதலாகத் தடவிக் கொடுக்கின்றது. இறுதிவணக்கம் நடைபெற, பயணம் தொடர்கின்றது.

## பொன்னிலா

தற்காலிகத் தளம் மீண்டும் அமைக்கப்பட்டது. வளர்மதி போராளிகளுடன் மட்டுமல்ல, வனத்து சீவராசிகளுடனும் அன்பாகவே தனது பொழுதினைக் கழித்தாள். ஒருமுறை காவல் உலாவுக்குச் சென்ற சமயம் தாய்க்குரங்கு ஒன்று தனது குட்டியை அணைத்தவாறு இவளைப் பார்த்தது அக்குட்டியை எப்படியும் தான் எடுத்து வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் இவளுக்கு.

(11 பக்கம் பார்க்க)

# தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்



## லெப். கேணல் பாமா

பூநகரியில் புலிகளால் நடாத்தப்பட்ட 'ஒப்பரேஷன் தவளை' நடவடிக்கையில் விழுப்புண்ணடைந்து, வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த போது இவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். லெப். கேணல் பாமா 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தன்னை விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் முழுமையாக இணைத்துக்கொண்டார். 1990 ஆம் ஆண்டளவில் பலாலி இராணுவத் தளத்தைச் சுற்றி அமைந்திருந்த காவலரண்களில் கடமையாற்றினார். அந்தக் காலகட்டத்தில் இங்கு நடைபெற்ற பல நேரடி மோதல்களிலும் இவர் பங்குகொண்டார். ஆனையிறவில் ஆகாய, கடல், வெளிச்சமரிலும், மணலாற்றில் 'மின்னல்' இராணுவ நடவடிக்கையின் போதும், புலோப்பளையில் 'ஒப்பரேஷன் யாழ்தேவி' நடவடிக்கையின்போதும் இவர் குறிப்

''கடற் புலிகள் மகளிர் படையணியின் தோற்றத்தைப் பற்றிச் சொல்லுங்கள்''

''கடற் புலிகளிலே பெண் போராளிகளைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று முடிவு எடுத்தது தலைவர்தான். அதைப்பற்றி அவர் எனக்குச் சொன்னபோது, 'பெண்களுக்கு படகு செலுத்துவது, நீந்துவதெல்லாம் கடினமாக இருக்குமே' என்று நான் சொன்னேன். 'அதெல்லாம் கடினமில்லை. அவர்கள் எல்லாம் செய்வார்கள். காலம் செல்லச் செல்ல சமூகத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டு, கடற்கரையில் கடலுக்குள் பெண்கள் போகக்கூடாது என்றநிலை மாறும்' என்று தலைவர் சொன்னார்.

கடற் புலிகளாகப் பயிற்றுவிக்கப்படுவதற்காகச் சில பெண் போராளிகள் எம்மிடம் அனுப்பப்பட்டனர். பகலில்தான் நீந்திப்பழகலாம். ஆனால் பகலில் நீந்திப்பழகிக் கொண்டிருக்கும்போது தற்செயலாக ஒரு பெண் போராளி நீருக்குள் அமிழ்ந்தாலும், கரையில்நின்று பார்த்துக் கொண்டிருப்பவர்கள் அதைக் கேலி செய்யலாம். பின்னர் அது எல்லோரினதும் சிரிப்புக்குரிய விடயமாகப் போய்விடும். அதனால் ஒருகிலோ மீற்றர் தூரத்தை நீந்திப் பழகும்வரை இவர்களைப் பகலில் பயிற்சிக்கு விடுவதில்லை என்று முடிவெடுத்தோம்.

அதனால் பகல் முழுவதும் தரையில் பயிற்சி எடுப்பதும், அரசியல் வேலைகளைச் செய்வதுமாக இருக்கும் அவர்கள், இரவு எட்டு மணிக்குப் பிறகுதான் கடலில் இறங்குவார்கள். இருளில்தான் நீந்திப் பழகினார்கள். ஏறத்தாழ கடலிலே இறங்கியதில்லை. ஆனால் பழக வேண்டும் என்று ஒரு வேகத்துடன் குறுகிய காலப்பகுதியிலேயே பழகிவிட்டார்கள்.

தலைவர் கடற்புலிகளுக்குரிய பயிற்சித் திட்டங்களை வரையறுக்கும்போது நீச்சலில் போட்டி ஒன்று வைத்தார். ஆண்கள் மூன்று கடல் மைல்களையும், பெண்கள் இரண்டு கடல் மைல்களையும் அடிப்படையில் முடித்திருக்க வேண்டும் என்று வரையறைசெய்தார். ஆனால் நீச்சலுக்கான விருதைப் பெறுவதாயின் பெண்கள் மூன்று கடல் மைல்களையும் ஆண்கள் ஐந்து கடல் மைல்களையும் நீந்தி முடிக்க வேண்டும் என்றுகூறப்பட்டது. இதன் அடிப்படையில் நடந்த நீச்சல் போட்டியில பல பெண்கள் ஐநது கடல் மைலை நீந்தி முடித்து (சராசரி பத்து கிலோ மீற்றருக்குமேல்) தலைவரிடம் விசேட பரிசு பெற்றார்கள். அவ்வளவு தூரத்துக்கு அவர்களிடம் வல்லமை இருக்கின்றது. கடற் பெண் புலிகள்பற்றிய தலைவரதும், எனதும் எதிர்பார்ப்புகளை அவர்கள் நிறைவேற்றியுள்ளனர் என்றே சொல்லலாம்''

''உங்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றியதில் லெப். கேணல் பாமாவின் பங்கு என்ன?''

''பாமா ஒரு கெட்டிக்காரி. அவர் அப்போது துணைப் பொறுப்பாளராக இருந்தார். சிறப்புப் பொறுப்பாளரும் பொறுப்பாளரும் பூநகரித் தளத்தைத் தாக்குவதற்காக சிறப்புப் பயிற்சி பெறப் போய்விட்டார்கள். இவர் தனியாக நின்றார். கடற் புலிகளின் அரசியல் வேலைகளைக் கவனிக்கவேண்டும். பயிற்சிப் பாசறையைக் கவனிக்கவேண்டும். இளாலியில் பாதுகாப்புச் சேவைக்குப் போகவேண்டும். தரையிறங்குவார்கள். பாதுகாப்புச் சேவைக்குப் போய்வரும் பாமாவால் பகலிலும் உறங்கமுடியாது. அரசியல்வேலை, பயிற்சிப்பாசறை என்பவற்றைக் கவனிக்கவேண்டும். பயிற்சி எடுக்கவேண்டும். தொடர்ந்து மூன்று, நான்கு நாட்களுக்குப் படகுச் சேவை நடைபெறுவதால், அந்த நாட்களில் பாமாவுக்கு ஓய்வே இருக்காது. ஆனாலும் பாமாவின் முகத்தில் ஒரு நாள்கூட சோர்வை நான் காணவில்லை.''

''நீங்கள் பழகியவரையில், அவருடைய சிறப்பான குணாம்சங்கள், திறமைகள் என்று கருதியவை?''

''பெண் போராளிகளால் எதுவுமே முடியும் என்று நாங்கள் நம்பியதை, பாமா நிரூபித்தார்.

ஒருமுறை கடலிலே கரும்புலித் தாக்குதலொன்று நடாத்தப்பட்ட கடற்சண்டையில், பாமாவின் படகு ஒன்றும் பங்கெடுத்தது அந்தத் தாக்குதலில் பாமாவின் படகிலிருந்த தொலைத் தொடர்பாளர் ஒரு தவறு செய்ததால், தாக்குதல் திட்டம் சிறிது தவறிவிட்டது, தாக்குதல் நடந்துமுடிந்தபின் நான் பாமாவிடம் தவறைச் சுட்டிக்காட்டினேன். பாமா தளரவில்லை. அடுத்தமுறை இந்தமாதிரி நடக்காமல் பார்க்கிறேன் என்று சொன்னார். இப்படி ஒருவரால் திடமாகச் சொல்லமுடியாது. நான் கூட என்னைப் பற்றித் தீர்மானமாகச் சொல்லுவேன். இன்னொருவரைப் பற்றி நிச்சயமாகச் சொல்லமாட்டேன். ஆனால் பாமா சொன்னார். செய்தும் காட்டினார். பூநகரிச் சண்டையின்போது எந்தத் தவறுமே நடக்கவில்லை. அந்தளவுக்கு ஒரு குறுகிய காலத்துள் அவா

முழுமையாக இணைத்துக்கொண்டார். 1990 ஆம்
ஆண்டளவில் பலாலி இராணுவத் தளத்தைச் சுற்றி
அமைந்திருந்த காவலரண்களில் கடமையாற்றினார்.
அந்தக் காலகட்டத்தில் இங்கு நடைபெற்ற பல
நேரடி மோதல்களிலும் இவர் பங்குகொண்டார்.
ஆனையிறவில் ஆகாய, கடல், வெளிச்சமரிலும்,
மணலாற்றில் 'மின்னல்' இராணுவ நடவடிக்கை
யின் போதும், புலோப்பளையில் 'ஒப்பரேஷன்
யாழ்தேவி' நடவடிக்கையின்போதும் இவர் குறிப்
பிடத்தக்க பங்காற்றினார். விடுதலைப் புலி
களின் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில்
பயின்ற இவர், கடற் புலிகள் மகளிர் படையணி
யின் துணைப் பொறுப்பாளராகக் கடமையாற்றி
னார். கிளாலி கடனீரேரியில் மக்களுக்கு பாது
காப்பு வழங்கும் பணியிலும் குறிப்பிடத்தக்க
பங்காற்றினார். இறுதியில் 'ஒப்பரேஷன்
தவளை' நடவடிக்கையின் போது
விழுப்புண் அடைந்து வீரச்சாவைத்
தழுவிக்கொண்டார். 'ஒப்பரே
ஷன் தவளை' நடவடிக்கை
யின் போது லெப்.கேணல்
பாமா உட்பட கடற்
புலிகள் மகளிர் படை
பணியின் ஒருஅணி
யினர், கடலிலே
நடந்த மோதல்
களில் பங்கு
ஏற்றனர்.

ஞுவர்களைப் பகலில்
பயிற்சிக்கு விடுவதில்லை
என்று முடிவெடுததோம்.

அதனால் பகல் முழுவதும்
தரையில் பயிற்சி எடுப்பதும்,
அரசியல் வேலைகளைச்
செய்வதுமாக இருக்கும்
அவர்கள், இரவு எட்டு
மணிக்குப் பிறகுதான்
சடலில் இறங்குவார்கள்.
இருளில்தான் நீந்திப்
பழகினார்கள். ஏறத்தாழ
இருபத்தைந்து
நாட்களிலேயே ஒரு கிலோ
மீற்றர் தூரத்தை நீந்திக்
கடக்கப் பழகினார்கள்.
இருபத்தாறாவது நாள்'
பகலிலே நீந்தத்
தொடங்கினார்கள்.
இத்தனைக்கும் அவர்களில்
பலருக்கு முன்பு கடல்
தெரியாது. தெரிந்த சிலர்

பொறுப்பாளரும்
பொறுப்பாளரும் பூநகரித்
தளத்தைத் தாக்குவதற்காக
சிறப்புப் பயிறசி பெறப்
போய்விட்டார்கள. இவர்
தனியாக நின்றார். கடற்
புலிகளின் அரசியல்
வேலைகளைக்
கவனிக்கவேண்டும். பயிற்சிப்
பாசறையைக்
கவனிக்கவேண்டும்.
கிளாலியில பாதுகாப்புச்
சேவைக்குப் போகவேண்டும்.
இநத மூன்று வேறுபட்ட
வேலைகளையும தனியாகப்
பொறுப்பெடுத்துச செய்தார்.

கிளாலிப் பாதுகாப்புச்
சேவையில் ஈடுபடுகின்றவர்கள்
இரவு முழுவதும
தூங்கமுடியாது.
தண்ணீரிலேயே நிற்பார்கள்.
அதிகாலையில்தான்

ஒருவரால் திடீரென்று
சொல்லமுடியாது.
நான் கூட என்னைப் பற்றித்
தீர்மானமாகச் சொல்லுவேன்.
இன்னொருவரைப் பற்றி
நிச்சயமாகச்
சொல்லமாட்டேன். ஆனால்
பாமா செய்ன்னார். செய்தும்
காட்டினார். பூநகரிச்
சண்டையின்போது எந்தத்
தவறுமே நடக்கவில்லை.
அந்தளவுக்கு ஒரு குறுகிய
காலத்துள் அவா
தன்னுடனிருந்த ஏனைய
போராளிகளைச்
செம்மையாகப்
பயிற்றுவித்தார்.

பூநகரிச் சண்டைக்குப்
புறப்பட்டுக் கொண்டிருக்கும்
போது பூநகரியில் ஒரு நீருந்து
விசைப்படகைக் கைப்பற்றிக்
கொண்டு வருவேன் என்றுதன்

எமது ஆயுதப் போராட்டம்
ச்சிக் கட்டத்திலும் தமிழீழக் கடல்
வகித்துள்ளது.

1984ஆம் ஆண்டு தலைவர்
லைப்புலிகள் இயக்கத்தின் கடற்
வரலாற்று ரீதியான பிறப்பைக்
கடற்புலிகள் எனப் பெயரும் சூட்
சிறிலங்காக் கடற்படைக்குச்
தலைப் புலிகளின் கடற் புலிகள்
கடற்புலிகளை வழிநடத்து
எமது இதழுக்கு வழங்கிய செவ்
யணியைப் பற்றியும்,லெப். கேணல்
டார். அவரது செவ்வி இங்கே



கடந்து வந்த ஒவ்வொரு வளர்
மிகப் பெரிய பாத்திரத்தை

பிரபாகரன் அவர்கள், விடுத
புலிகள் படைப்பிரிவுக்கு அதன்
கொடுத்து, ஆரம்பத்தில் அதற்கு
டினார்.
சவால் விடும் அளவுக்கு, விடு
அணி இன்று வளர்ந்துள்ளது.
இன்ற திரு. சூசை அவர்கள்
வியில் கடற்புலிகள் மகளிர்படை
பாமாவைப் பற்றியும் குறிப்பிட்
பிரசுரமாகிறது.

# கடற்புலிகளின் மகளிர் படையணி

பிள்ளைகளிடம் சொன்னார். சொன்னமாதிரியே பூநகரியிலிருந்து ஒரு நீருந்து விசைப்படகை அவர் எடுத்தார்.''

''நீங்கள் கடற் புலிகளின் சிறப்புத் தளபதி என்ற வகையில் லெப். கேணல் பாமாவைப்பற்றிய உங்கள் தனிப்பட்ட கணிப்பு என்ன?''

''பாமா அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த பொழுதுதான் எனக்கு அவரை முதன் முறையாகத் தெரியும். அங்கு படிப்பை முடித்துவிட்டு கடற்புலி அணியில் இணைந்து துணைப் பொறுப்பாளராகக் கடமையாற்றினார். மிகக் குறுகிய காலத்துள் கடலிலே மிகத் திறமையான போராளியாகத் தன்னை வளர்த்துக்கொண்டார்.''

"கடற்புலிகள் மகளிர் படையணியை மக்கள் எந்தளவுக்கு ஏற்றுக் கொண்டுள்ளனர்? நீரிலே இவர்கள் சாதாரணமாக நடமாடுவதால் மக்களிடையே குறிப்பாகப் பெண்களிடையே மாற்றங்கள் நிகழ்ந்துள்ளனவா?"

அவர்கள் கடலிலே வேகமாக நீந்தக்கூடியவர்கள் என்பது மக்களுக்குத் தெரியும். நீண்டகால அனுபவங்கொண்ட மீனவர்களில் எத்தனைபேர் மூன்று கடல் மைல்களை நீந்தியிருப்பார்கள் என்பது கேள்விக்குறி. ஆனால் பெண் போராளிகள் ஐந்து கடல் மைல்கள் தூரத்தை நீந்திக் கடந்ததை தமது கண்களால் நேரடியாகவே மக்கள் பார்த்தனர்.

பெண் போராளிகள் வேகமாகப் படகுகளை ஓட்டுகிறார்கள், மக்கள் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுகிறார்கள் என்பது கிளாலிக் கடனீரேரியைக் கடக்கின்ற அத்தனை பொது மக்களுக்குமே தெரியும். அந்தப் பெண் போராளிகளில் நம்பிக்கை வைத்துத்தான் மக்கள் கடலிலே பயணிக்கின்றார்கள்.

சாதாரணமாக மீனவர்கள் சராசரியாக எட்டிலிருந்து ஐம்பத்தைந்து வரையிலான குதிரை வலுக்கொண்ட இயந்திரங்களைத்தான் இயக்குகின்றார்கள், ஆனால் எமது பெண் பிள்ளைகள் நூற்றைம்பதிலிருந்து இருநூறு வரையிலான குதிரை வலுக்கொண்ட இயந்திரங்களை இயக்கி

படகுகளைத் தொடுத்து படகை அணைத்தவாறு வேகமாக ஓட்டுவதை எல்லோரும் செய்யமாட்டார்கள். ஆனால் பூநகரிச் சண்டைக்காக ஏறத்தாழ மூன்று வாரங்களுக்குள்ளே படகுக்கு பின்னால் இரு படகுகளைத் தொடுத்து ஓட்டிப் பழகிவிட்டார்கள். பூநகரிச் சண்டையின் போதும் ஒரு தாக்குதலை நடத்துவதற்காக அவ்வாறு படகுகளை ஓட்டினார்கள்.

பெண்கள் கடற்கரைக்கு வருவதும் கடல்நீரில் இறங்குவதும் தவறு, கூடாது என்றெல்லாம் நினைத்த சமூகம்இன்று பெண்போராளிகள் கடலிலே சாதாரணமாக நடமாடிக்கொண்டிருப்பதை, இவர்களின் வளர்ச்சியை ஏற்றுக்கொள்கின்றது. அண்மைக் காலமாக கரையோரப் பகுதிகளில் பெண்கள் நீந்திப்பழகுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இது கடற்புலிகள் மகளிர் படையணியின் நடவடிக்கைகளால் ஏற்பட்ட மாற்றம்தான் என்பதை நிச்சயமாக நம்பலாம்.

நீந்துவதையும் படகு செலுத்துவதையும் மக்கள் அறிந்திருக்கிறார்கள். மக்களுக்குத் தெரியாத ஒன்றையும் நான் இப்போது



நிலையில்தான் இருப்பார்கள்: தொலைக் கண்காணிப்புக் கருவிகளை (ராடர்) இயக்குபவர்கள்தான், படகிலிருப்பவர்களைத் தொலைத் தொடர்புச் சாதனங்களின் மூலம் வழி நடத்திக்கொண்டிருப்பார்கள் தொலைக் கண்காணிப்புக் கருவிகள் மூலம் கடலை அவதானித்து, படகுகளுக்கு உத்தரவுகளைக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். இவர்கள்தான் படகிலிருக்கும் போராளிகளின் கண்கள் போன்றவர்கள். கடலை அவதானித்து, படகுகளுக்கு உத்தரவு வழங்குகின்ற வேலையைப் பெண் போராளிகள்தான் செய்கின்றார்கள். மிகவும் நுட்பமான வேலை இது. பெண் போராளிகள் திறமையாகச் செய்கின்றார்கள்.

தலைவருடன் கதைத்த பின்னர், பெண் போராளிகளால் முடியும் என்பதை நான் நம்பினேன். ஆனால் இவ்வளவு வேகமாக, மிகுந்த வலுவுடன் அவர்கள் தம்மை வளர்த்துக்கொள்வார்கள் என்பதை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் தமது திறமையை மட்டுமல்லாமல் ஆட்பலத்தையும் அதிகரித்திருக்கிறார்கள். ஒன்றரை வருடங்களின் முன் சில பத்துக்கள் என்ற எண்ணிக்கையில் இருந்தவர்கள். இன்று சில நூறுகள் என்ற அளவில் தம்மை வளர்த்து உள்ளார்கள்.

மிகப் பெரிய கடற்போர் என்று இதுவரை எதுவும் நடக்கவில்லை. ஆனால் நடந்துமுடிந்த சிறு சிறு



லை.
கிய
னய

குப்
டிருக்கும்
ரு நீருந்து
ப்பற்றிக்
என்றுதன்



''கடற்புலிகள் மகளிர் படையணி 1992.03.01 அன்று ஆரம்'¢க்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட சில நாட்களுக்குப் பின்னிருந்து, படகுகளை மிக வேகமாகச் செலுத்துகிறார்கள்.

சாதாரணமாக ஒரு படகுக்குப் பின்னால் இரு சொல்கின்றேன். இருளிலே கடலிலே சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போராளிகள், கண்கள் கட்டப்பட்டதுபோன்ற

மிக ஆரம்பத்திலே, கடலிலே பெண் போராளிகள் வேலை செய்வது பற்றி எனக்குச் சந்தேகம் இருந்தபோது அதைத் தலைவர் தீர்த்து வைத்தார்.

நடக்கவில்லை. ஆனால் நடந்துமுடிந்த சிறு சிறு சடற்போர்களில் பெண்கள் மிகத் திறமையாகச் செயற்பட்ட''ர்கள். இந்த வளர்ச்சி நான் மட்டுமல்ல, யாருமே எதிர்பார்க்காத ஒன்று.''

...ந்த ஒவ்வொரு வளர்
..ரிய.. பாத்திரத்தை

... அவர்கள், விடுத
...டைப்பிரிவுக்கு அதன்
... ஆரம்பத்தில் அதற்கு

...ம் அளவுக்கு, விடு
...று வளர்ந்துள்ளது.
...ரு. சூசை அவர்கள்
...ற்புலிகள் மகளிர் படை
... பற்றியும் குறிப்பிட்
...றது.

ஒரு நாட்டின் தலைவிதி அந் நாட்டின் பெண்களால்தான் தீர்மானிக்கப்படுகின்றது.

-நெப்போலியன்.

ஒரு தாய் தனக்கு என்னவாகவெல்லாம் இருக்கின்றாள் என்பதை மனிதன் கடைசிவரை உணர்வதில்லை. அவன் அதை உணரும்போது அதை உணர்ந்ததாக அவளிடம் அவன் சொல்வதற்கு அவள் உயிரோடு இருப்பதில்லை.

வில்லியம் டீன் ஹோவெல்ஸ்

ஜப்பானில் வேலை செய்யும் பெண்களுக்கெனத் தனிச் சங்கம் இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் வீட்டில் மனைவிக்கு உதவியாக இருந்துவரும் கணவன்மார், மனைவியைக் குறித்த நேரத்தில் வேலைக்கு அனுப்பி வைக்கும் கணவன்மார்களில் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்துப் பரிசுகள் வழங்கிப் பாராட்டுகிறது இச் சங்கம். ஆணும் பெண்ணும் சமம் என்ற கொள்கையை வலியுறுத்துவதே இச் சங்கத்தின் நோக்கமாகும்.

மலர்மல்லிகை

## நான்காம் ஆண்டு நினைவில்

சண்டை பிடிப்பவர்களையும், ஒருவரோடொருவர் கதைக்காமல் இருப்பவர்களையும் சோதியாக்கா கூப்பிட்டு அறிவுரைகள் கூறிக் கண்டிப்பார். ''இஞ்ச வாங்கோ ரெண்டு பேரும். ஏன் ஒருத்தரோட ஒருத்தர் கதைக்காமல் இருக்கிறியள்? இந்தப் பழக்கம் எல்லாத்தையும் வீட்டில விட்டிட்டு வரவேணும். இஞ்ச இப்படி இருக்கேலாது. அம்மா, அப்பா எல்லாரையும் நாங்க விட்டுட்டு வந்திட்டம். ஒரு இலட்சியத்துக்காகத்தான் எல்ல'ரும் சேர்ந்திருக்கிறம். இஞ்ச அம்மா, அப்பா பந்த பாசங்கள் எல்லாமே ஒருத்தருக்கு ஒருத்தர் நாங்கதான். ஒருத்தரை ஒருத்தர் தெரியாத நாங்க ஏன் ஒண்டாயிருக்கிறம்? எங்கட மண்ணில் இருந்து அன்னியனைத் துரத்தியடிச்சு எங்கட மண்ணை மீட்டெடுக்கத்தானே?'' இப்படியே தெளிவான விளக்'ம் மணிக்கணக்கில் சோதியாக்கா தருவார்.

சோதியக்காவின் விளக்கத்தால் தெளிவடையும் நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்து அர்த்தமான சிரிப்பொன்றைச் சிரித்து விட்டு, ''இனிச் சண்டை பிடிக்கமாட்டம்'' எனச் சோதியாக்காவிடம் சொல்லிவிட்டு தெளிந்த மனத்துடன் எழுந்து செல்வோம். அந்த மூன்று வருட காலத்தில் நான் சோதியாக்காவிடம் நிறையப் படித்துக் கொண்டேன். எங்ளுக்கு அவர் நிறைய அறிவுரைகள் கூறுவார். 'குழப்படிகள்' என்று கொஞ்சப்பேர் இருந்தோம். இவர்களில் கப்டன் ரஜனி, கப்டன் தமயந்தி, கப்டன் ஆஷா, மேஜர் தாரணி, 2-ம் லெப் மாலதி என்று பலர் அடங்குவர். இந்தக்குழப்படிகளைத் தனது அன்பான கண்டிப்புகளாலும் அறிவுரைகளாலும் மேஜராக, கப்டனாக, லெப்டினன்டாக வளர்த்து விட்டவரும் வளர்வதற்குக் காரணமாக இருந்தவரும் மேஜர் சோதியாக்காதான்,

எங்களின் தாயாக, தாதியாக, ஆசிரியையாக இருந்தவர் சோதியாக்கா. இவ்வளவுக்கும் அப்போது சோதியாக்கா சாதாரண ஒருபோராளியாகத்தான் இருந்தார். வழமையாக எங்களுக்கென பொறுப்பாக விடப்படும் போராளிதான் எல்லாவற்றிலும் பொறுப்பாகச் செயல்படுவார். ஆனால்... எங்களின் சோதியாக்கா வித்தியாசமானவர்......

## சிறுகதை

# தெளிவு

### மலரன்னை

என்னை மறந்த நிலையில் நான் சுவாரசியமான கதைப்புத்தகமொன்றில் மூழ்கிப் போயிருந்தேன். எங்கள் மண்ணின் நிகழ்வுகளைச் சித்திரிக்கும் கதைகள் என்றால் எனக்கு அலாதிப்பிரியம். கதையுடன் ஒன்றிவிட்ட என் உணர்வுகளை சைக்கிள் மணி ஓசை கலைத்து விட்டது.

டிரிங்! டிரிங்!!

இப்போது கேற்றடியில் அம்மாவின் குரல் கேட்டது. நான் மீண்டும் கதையை வாசிக்கத் தொடங்கினேன். அம்மா ''ஐயோ!'' என்று கத்தியவாறு ஓடிவந்து என்னைக் கட்டிப்பிடித்து அழத்தொடங்கினாள்.

ஒன்றுமறியாது திகைத்த நான் ''அம்மா!, என்னெண்டு சொல்லுங்கோவன்', என்று வற்புறுத்திய பின்னர்தான் ''உனக்குப் பேசி இருந்த மாப்பிளைப் பெடியன் கிளாலிக் கடலுக்கை செத்துப்போச்சுதாம்'' என்று கூறி 'ஓ' வெனக் கதறினாள்.

அப்பொழுதுதான் நேற்றைய ஈழநாதத்தில் வெளியாகிய தலைப்புச் செய்தி என் ஞாபகத்தில் வந்தது. 'கிளாலிக் கடலில் படுகொலை' என்ற செய்தியின் பின்னணிதான் இந்த மரணச் செய்தியாயிருக்க வேண்டுமென ஊகித்துக் கொண்டேன்.

என்னில் எந்தவித உணர்ச்சி வேறுபாடும் தோன்றவில்லை. முன்பின் தெரியாத ஒருவரின் மரணத்தையிட்டு என் மனம் சலனப்படவேயில்லை. அம்மாவின் அழுகையை நிறுத்த முயற்சி செய்தேன். ''அம்மா! பெலமாய் அழாதையுங்கோ. சத்தம் கேட்டால் அயலட்டைச் சனங்கள் வந்து குவியப் போகுதுகள்.'' இந்த அம்மாவுக்கு எங்கிருந்துதான் கண்ணீர் வருகிறதோ என்று எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

எனக்கே என்னுடைய நிலை புரியாத ஒன்றாகிவிட்டது. அன்று... பத்திரிகையில் வெளியாகி இருந்த கரும்புலி வீரர்களின் படங்களைப் பார்த்ததும் என் உடம்பெல்லாம் சிலிர்த்தது. உணர்ச்சிவசப்பட்டுப் போனேன். இன்று... என் வாழ்க்கையில் இணைய இருந்தவரின் இழப்பு ஏன் என்னை எந்தவிதத்திலும் பாதிக்கவேயில்லை?

அம்மாவின் குரல் அயலவர்களுக்குக் கேட்டதோ இல்லை

போச்சே'' இது அம்மாவின் குரல்.

அவர்களின் பேச்சுக்கள் போன திசையைப் பார்த்தால் நான்தான் அவரது மரணத்துக்குக் காரணகர்த்தாவாக இருந்ததைப் போலிருந்ததே தவிர, எங்கள் இனத்தை எதிரி அழிக்கவும் பழிவாங்கவும் முனைவது பற்றிய பேச்சுக்கே அங்கு இடமிருக்கவில்லை. சுற்றி வளைத்து என்மீது பழிசுமத்துவதில் தான் ஆர்வமாயிருந்தனர். இவர்களின் அறியாமையை எண்ண எனக்குவேதனையாயிருந்தது. இதற்கிடையில் அப்பாவின் குரல் கேட்டது.

'' சரசு, வெளிக்கிடுமன்: நாங்கள் அங்கை ஒருக்கால் போட்டு வருவம். 'பொடி' இண்டைக்கு வந்திடுமாம். உடனயே எடுத்துப்போடுவினம் வைச்சுப்பார்க்கக் கூடிய நிலையில இருக்காது நாங்கள் போகாமல் விடுறது சரியில்லைப் பாரும்.''

''எங்களைக் காண அதுகளுக்குக் கவலை இன்னும் கூடப்போகுது. எண்டாலும் என்ன செய்யிறது ஒருக்கால் போட்டு வருவம்''.

அம்மா சொல்லிக் கொண்டே அறைக்குள் வந்தார். அப்பாவும் பின்னால்வந்தார். எனது கட்டிலருகில் வந்து நின்று, '' கலா கவலைப்படாத மேனை. மேலை இருக்கிறவன் நினைக்கிறபடிதான் எல்லாம் நடக்கும்'' சொல்லி விட்டுப்போய் விட்டார்.

அந்த நேரத்திலும் அப்பாவின் பேச்சைக் கேட்க எனக்குச் சிரிப்புத்தான் வந்தது, ஏதோ நான் கவலையில் மூழ்கிப்போயிருப்பதாக எண்ணும் இவர்களை நினைத்துச் சிரிக்காமல் என்ன செய்வது?

தங்கை யாமினி கொண்டு வந்து தந்த கோப்பியை வாங்கிப் பேசாமல் குடிக்கிறேன். ஏன் எனக்கு இந்தச் சங்கடமான நிலை? எனக்கே புரியவில்லை. சிறிது நேரத்தில் பாக்கியம் மாமி போய் விட்டார். போகும்போது,

''பிள்ளை யாமினி நீ ஒண்டும் செய்யாதைபிள்ளை. நான் மத்தியானத்துக்கு உங்களுக்கும் சேத்துச் சமைச்சுக் கொண்டு வாறன்'' என்று சொல்லி விட்டுப் போனார். நாங்களிருவருமே மறுத்துச் சொல்ல முடியாமல் இருந்து விட்டோம்.

பாக்கியம் மாமியை நினைக்க எனக்குப் பச்சாத்தாபம் ஏற்பட்டது. தன்னை மறந்து, பிறருக்கு உதவி செய்வதில் பாக்கியம் மாமி எப்போதும் முன்னுக்கு நிற்பார். அவரின் மகள் கார்த்திகாவுக்கும் எனக்கும் ஒரே வயது. தாயைப் போன்ற குணம்தான் அவளுக்கும் அமைந்திருந்தது. சில மாதங்களின் முன் ஒரு நாள் டியூசனுக்குப் போனவள் திரும்பி வரவில்லை. அத்துடன் எனது படிப்புக்கும் முற்றுப் புள்ளி வைத்துவிட்டார் அப்பா,

அதன் பின்னர்தான் எனக்கு அமளியாகத் திருமணம் பேசப்பட்டது. அம்மாவின் தாலிக்கொடி எனக்கு அட்டியலாகவும், காப்புகளாகவும் மாறியது. அம்மாவின் மற்றைய நகைகளெல்லாம் அக்காவின் திருமணத்தோடு அவளின் கையையும், கழுத்தையும் அலங்கரிக்கப் போய்விட்டன. இரண்டு மாதங்களின் முன்

ஒரு இடம் பொருந்தி வந்தது. மாப்பிள்ளை கொழும்பில் ஒரு கடையில் நிற்கிறாராம் எங்களின் சீதனத்துக்கு ஏற்ற இடம். அவர் வந்து என்னைப் பார்த்து விட்டு பெண் கறுப்பு என்று சொல்லி நிராகரித்து விட்டார். என்னைக் கறுப்பு என்று பழித்தவர், தான் வெள்ளைத் தோல் படைத்தவரா என்றால் அதுதான் இல்லை. அவர் என்னை விடக் கறுப்பு. எனக்கு அப்பா, அம்மா மீது கோபம் கோபமாக வந்தது. எனக்குத் திருமணமே வேண்டாம் என்று எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்டால் தானே.

அன்றிலிருந்து என் மனதில் பெரும் போராட்டம் நிகழ்ந்தவண்ணமிருக்கிறது. திருமணச் சந்தையில் பெண்களை விலை பேசுவதும், அழகு பார்ப்பதும் எனக்கு வெறுப்பைக்

தட்டிக்கழித்து விட்டார், எங்கள் வீட்டில் எப்போதுமே அப்பாவின் கைதான் ஓங்கும். அம்மாவுக்கு வாய்மட்டுந்தான். அப்பாவின் ஒரு அதட்டலில் பெட்டிப்பாம்பாக அடங்கிப் போய்விடுவார்,

வாசலில் வந்து நின்ற ஆட்டோவின் இரைச்சல் என் எண்ணத்தொடரைக் குழப்பி விட்டது' வெளியில் வந்து எட்டிப் பார்த்தேன். அப்பாவும், அம்மாவும் தான் வந்தார்கள். என்னை கண்டதும் ஏதோ பெரிய இழப்பைச் சந்தித்தவர்கள் போல் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டார்கள். நான்மௌனமாய் நின்று கொண்டிருந்தேன்: அம்மா, யாமினியைக் கூப்பிட்டு ''கிணத்திலதண்ணி அள்ளித் தா பிள்ளை'' என்று சொல்லிக் கூட்டிக் கொண்டு போனார்.

இரவு வெகு நேரமாகியும் நித்திரை என்னை அணுக மறுத்தது. யாமினி கூறிய சில வார்த்தைகள் என் நினைவில் மோதின 'பொடி'யை வைச்சிருந்த பெட்டியைத் திறக்கவேயில்லையாம், சுட்டுப் போட்டுக் காலால மிதிச்சு முகத்தைச் சிதைச்சுப் போட்டாங்களாம். இப்படிச் செய்தவர்களைப் பழிவாங்க வேண்டுமென்ற நினைப்பு யாருக்காவது இருப்பதாகத் தெரியவில்லை.

''தாய் மனுசியைப் பாக்கிற நிலையில் இல்லை. மனுசி மண்டையைப் போட்டு அடிக்குது. அந்தப் பொடியன்தான் இவ்வளவு நாளும் உழைத்துத் தங்கச்சிமார் ரெண்டு

பேரையும்கரை சேர்த்ததாம்; தங்கச்சிக்காரியள் கரைஞ்சு போறாளவை, அண்ணை,

அண்ணை எண்டு கத்திக் குழறினபடிதான். ஓயவே இல்லை'' அம்மா தாழ்ந்த குரலில் யாமினிக்குச் சொல்லும் போது என் காது ஒட்டுக் கேட்டு விட்டது. அந்த வார்த்தைகள் என் நெஞ்சில் எதிரொலித்துக் கொண்டே இருந்தன. இப்படித் துயருறுவோர் இவர்கள் மட்டும் தானா? இல்லையே அங்கு கொலையுண்ட அத்தனை பேர்களது உறவினரது நிலையும் இப்படித்தானே இருந்திருக்கும். புரண்டு புரண்டு படுத்துப் பார்க்கிறேன். கண் துயில்கொள்ள மறுத்தது

நீண்ட நேர மனச்சஞ்சலத்தின் பின் என்னையறியாமலே கண் உறங்கி விட்டேன். யன்னலினூடாகப் புகுந்த வெயில் என் முகத்தில் பட்டதும்தான் திடுக்கிட்டு விழித்தேன், விடிந்து வெகு நேரமாகி இருக்க வேண்டுமென ஊகித்துக் கொண்டேன், எப்படி நான் உறக்கத்தில் ஆழ்ந்தேன் எனப் பழைய நினைவுகளை மீட்டுப் பார்த்தேன். என் மனதில் எந்த விதச் சலனமும் இருக்கவில்லை. நிதானமாக எழும்பிக் காலைக் கடன்களை முடிக்கிறேன். கழுவிய முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டேன். எல்லாவற்றையும் துடைத்து விட்டதாக ஒரு நினைப்பு. துடைக்கும்போது கையில் அணிந்திருந்த காப்புகள் ஒலி எழுப்ப, எனக்கு யாமினியின் நினைவு வருகிறது, அலுமாரியைத் திறக்கிறேன். அங்கே.. அம்மா எனக்கெனச் செய்து வைத்திருக்கும் நகைகள் என்னைப் பார்த்துச் சிரிப்பதுபோல் ஒரு பிரமை, கையிலிருந்த காப்புகளையும் கழற்றி அவற்றுடன் வைக்கிறேன்.

என் மனம் லேசாகி விட்டது போன்ற உணர்வொன்று என்னை ஆட்கொள்கிறது. என் சிந்தனையில் என்றுமேயில்லாத தெளிவு...

## எங்கே போகிறார்கள்

மரணம் என்பதே வாழ்வாம்.
இம் மண்ணில்
மலர் வளையங்களே
மணமாலைகள்,
ஒரு சிதையிலே
நெருப்பு சிரித்தால் - பின்
பல சிவப்பு மலர்கள்
அணிவகுக்கும்!
உடல்கள் களத்திலே
ஓய்ந்தாலும் - மறுஉடலில்
உயிர் உடனே புகுந்துவிடும்.
ஒரு மார்பில் வேட்டோசை
பாய்ந்தாலும் - பின்
பல இதயங்களில்
விடுதலைப் பாட்டோசை
பிறந்துவிடும்!

திலும் பாதிக்கவேயில்லை?

அம்மாவின் குரல் அயலவர்களுக்குக் கேட்டதோ இல்லையோ வீட்டில் பெரிய தொரு கூட்டம்கூடிவிட்டது. என்பாடு பெரிய திண்டாட்டமாகப் போய்விட்டது. என்ன செய்வதென்றறியாமல் பேசாமல் போய் படுக்கையில் விழுந்தேன். வீட்டில் கூடியிருந்தவர்களின் உரையாடல்கள் மட்டும் என் காதுகளில் விழுந்த வண்ணமிருந்தன.

''நல்ல காலம் கலா தப்பி விட்டாள். தாலி கட்டி இருந்தால் விதவை எண்டு பேரெடுத்திருப்பாள்.''

''நல்ல கதை சொன்னியள். இப்ப மட்டும் என்ன? இவளுக்கெண்டு பேசி முற்றாக்கிக் கலியாணஞ் செய்து கொண்டு போக வந்த பெடியன்தானே. ஒருவேளை இவளுக்கு ஏதும் செவ்வாய்தோசம் இருந்திருக்குமோ?'' என்று ஐயத்தைக் கிளப்பினாள் ஒருத்தி.

''மெய்யே சரசு, வடிவாய்ச் சாதகம் பொருத்தம் பார்த்தவீங்களே?''

''ஓமெணை அக்கா. எல்லாந்தான் பாத்தது. நல்ல பொருத்தமெண்டு சொன்னாங்கள், இப்பிடி நடந்து

ஏதோ நான் கவலையில் மூழ்கிப்போயிருப்பதாக எண்ணும் இவர்களை நினைத்துச் சிரிக்காமல் என்ன செய்வது?

ஆட்டோ ஒன்று வந்து நிற்கும் சத்தம் என் காதுகளில் விழுகிறது. அப்பாவும், அம்மாவும் வேறு சிலரும் புறப்பட்டுப்போவது என் புலனுக்குத் தெரிகிறது. ஆட்டோ புறப்படும் சத்தம் கேட்கிறது. வீட்டில் கூடியிருந்தவர்கள் கலைவதை உணர்கிறேன் பக்கத்து வீட்டுப் பாக்கியம் மாமி மட்டும் என்னிடம் வருகிறாள்.

''இனி என்ன செய்யிறது? உன்ரை விதி அப்பிடியாப் போச்சு. நெடுக அழுது கொண்டு கிடந்தால் மண்டைக்குத்து வந்திடும் எழும்பு பிள்ளை'' என்று சொல்லி எனது தலையைத் தடவி விடுகிறார். பேசாமலிருக்கும் என்னை அழவைத்து விடுவது போலிருந்தது அவரின் போக்கு.

''பிள்ளை யாமினி! கொஞ்சம் கோப்பி போட்டுக் கொண்டு வந்து கொக்காவுக்குக் குடு மேனே'' பாக்கியம் மாமி தான் எனது தங்கையைக் கூப்பிட்டுச் சொல்லுகிறார்.

எனக்கு என்ன வந்துவிட்டதென்று இந்த ஆரவாரம்?

அன்றிலிருந்து என் மனதில் பெரும் போராட்டம் நிகழ்ந்தவண்ணமிருக்கிறது. திருமணச் சந்தையில் பெண்களை விலை பேசுவதும், அழகு பார்ப்பதும் எனக்கு வெறுப்பைத் தருகின்றன. அப்பா ஒரு தரகர் மூலமாக இந்தச் சம்மந்தத்தைப்பேசி, முற்றாக்கியும் விட்டார். இந்த முறை பெண் பார்க்கும் படலம் புகைப்படம் மூலம் நடந்தேறியபடியால் நிறத்தைப் பற்றி குறை கூற இடமில்லாமற் போய்விட்டது. யாரோ ஒருவருடைய புகைப்படத்தைப் பார்த்தவுடன் அவர் மீது எனக்கு அன்போ, பரிவோ ஏற்பட்டு விடுமா என்ன? என் குழம்பிய மனம் ஒரு நிலைப்பட மறுத்துக் கொண்டிருந்தது. நான் மட்டுமா, என்னைப்போல் எத்தனை பெண்கள் இந்த நிலையில்? நாளுக்கு நாள் என் மனப்புழுக்கம் அதிகரித்ததே தவிரக் குறைந்தபாடில்லை உணர்ச்சியற்ற சடமாக வீட்டினுள் வளைய வந்து கொண்டிருந்தேன்,

அப்பாவும், அம்மாவும் இளமைப் பருவத்துக்கு மீண்டுவிட்டவர்கள் போன்று அங்குமிங்கும் ஓடியாடித் திருமண ஒழுங்குகளைக் கவனித்தனர் அம்மா வீட்டுக்கு வெள்ளை அடிக்க வேண்டுமென்று ஒரே பிடியாக நின்றார், அப்பாவோ செலவை முன்னிட்டு



உடல்கள் களத்திலே
ஓய்ந்தாலும் - மறுஉடலில்
உயிர் உடனே புகுந்துவிடும்.
ஒரு மார்பில் வேட்டோசை
பாய்ந்தாலும் - பின்
பல இதயங்களில்
விடுதலைப் பாட்டோசை
பிறந்துவிடும்!

முடிவுகள் இங்கே முடிவுமல்ல.
முன்னேறும் பாதையின் படிக்கற்கள்.
தளிர்கள் தரையினுள்
புதைந்தாலும் - தமிழீழம்
மலர்வது நிச்சயமே!

மங்கலத் தாலிகள் அறுப்பதும்
மாதர்கள் மானத்தைப் பறிப்பதும்
கழிந்த கனவுகளே.
அகப்பை ஏந்திய கரங்கள் - இன்று
சுடுகலன் தாங்கி
எல்லையில் நிற்கின்றனவே?
எண்ணங்களை அசைபோடுங்கள்!
இவர்களுக்கு
அன்போடு தலைதடவ
அம்மா, அப்பா இல்லையா?
ஆசையோடு, உரிமையோடு
'அக்கா' 'அக்கா'
என்று அழைக்க
தம்பி, தங்கை இல்லையா?
தவழ்ந்த வீட்டையும்
தளிர் நடை போட்ட
முற்றத்தையும் விட்டு
இவ்வளவு உறுதியுடன்
எங்கே போகிறார்கள்?
ஆம்.
பூக்கள் எல்லாம்
புயலாகி விட்டன.
இந்தப் பூக்களின் தியாகம் - நாளை
புதிய சரித்திரம் படைக்கும்.

- வினோதினி

# விடியலுக்குத் தூதுவந்த வெள்ளைப்புறா

இப்போது நினைத்தாலும்
எங்கள் இதயம் வெடிக்கிறது!
தங்கத் தமிழ்த் தலைவன்
தம்பியின் வலக்கரமான நீ
தாயகத்து மண்மீது
தடம் பதிக்க வந்தவேளை......
தருணம் பார்த்திருந்து
தருக்கர் உன்னை அழித்ததனை
இப்போது நினைத்தாலும்
எங்கள் இதயம் வெடிக்கிறது!
விம்மி விம்மி அழுது எங்கள்
விழிகள் இறக்கிறது!
நாம்வடித்த நீரூறி இந்த
நிலம் நனைந்து போகிறது!
வெடித்துச் சிதறியபின் - நீயற்ற
வெறுமையை எண்ணி எண்ணி
வேதனை பிறக்கிறது!
விடியலுக்குத் தூதுவந்த
"வெள்ளைப்புறா" உன்னை
ஏகாதிபத்தியத் தீவிழுங்கி
ஏப்பமிட்டு இன்றோடு
ஓராண்டு முடிகிறது! எங்கள்
உள்ளம் அழுகிறது!

சிங்களத்துச் சேனைகளைச்
சீறியே விரட்டி நின்ற
உதயத்துக்கதிரே... எங்களது
உறுதியின் உறைவிடமே,
வாடுகின்ற எங்களுக்கு
வழியொன்று சுமந்துவந்தாய்.
வாசல்வரை வந்த உன்னை
வழிமறித்து நின்றார்கள்.
முன்னாலே வந்திருந்தால் உன்
மூச்சாலே எரித்திருப்பாய்!
எங்களின் விடிவெள்ளி நீ
எதிரி கையில் அணையவில்லை!
சங்கத் தமிழ் மரபு
சாற்றிநின்ற வீரத்தை
எங்கள் தமிழ்மண்ணில் - மீண்டும்
எழுதிய மறவன் நீ!
கிட்டண்ணா! நீ இங்கு
விட்டுச் சென்ற பணிகளை நாம்
தொட்டுத் தொடர்வதற்குத்
தோள்களை உயர்த்தியுள்ளோம்.
மீட்டு நாம் எடுப்போம்
மிகவிரைவில் தாயகத்தை!

ஆதிலட்சுமி சிவகுமார்

# மீண்டும் ஒருமுறை

எறிகணைகள் எங்கும் பாய
எரித்திடும் குண்டு விழ
வந்த பகைக் கூட்டமதை
சிறை வைத்த வீரன் எங்கே?

களம் பல கண்ட மகன்
கனலென புகுந்த தீரன்
மின்னலென அடி கொடுத்து
வெற்றி முரசம் கொட்டிடுவான்.

வஞ்சனையர் வைத்த குறி
காலினைக் கவர்ந்த போதும்
அஞ்சாது துணிவு கொண்டு
ஆற்றலுடன் உலாவந்தான்.

அமைதியென்று வந்தபடை
அர்த்தமற்று போர் தொடுக்க
குறிதவறாக் கத்தியெல்லாம்
குழியினுள் புதைந்ததுவே.

களத்தினில் போர்க் கானம்பாடிய குயில்
கண்டங்கள் பல கடந்து
தமிழ் கேட்கும் திசையெங்கும்
கடமை செய்ய விரைந்ததுவே.

செய்த மன நிறைவுடனே
இனிய தாயகம்காண வருகையிலே
வங்கக் கடலதனில் வல்லரசு வந்ததுவே
தோழருடன் தளபதியை தன்னகத்தே கவர்ந்திட.


ஒன்பது வேங்கையுடன் ஒன்றானாய்.
கடமையே கண் எனும் தாரக மந்திரத்தின்
தார்மீகம் உணர்ந்த நீ
கடலினில் கரைந்து காவியமானாயோ.

ஆண்டுகள் ஆயிரம் ஆயினும்
ஆறாதையா எம் நெஞ்சம்.
மீண்டும் ஒருமுறை
பிறப்பெடுத்து வந்துவிடு.

விடியலின் பூபாள இசை
காற்றிடை கலந்து வரும்
கானமதைக் கேட்பதற்கு
மீண்டும் ஒரு முறை
பிறப்பெடுத்து வந்து விடு.

ச...வேரி

# விடுதலைக்கு விழுதாய் நின்றவன்!



*இலட்சியம் சுமந்த இமயமொன்றை*
*அசோகச் சக்கரம் அள்ளிச்சென்றதோ?*
*வங்கக் கடல்மீது வந்தவர்கள்*
*தங்கத் தமிழீழம் காணமுன்பு*
*ஆக்கிரமிப்பு அலைகள் அள்ளிச்சென்றன.*
*கிட்டண்ணா !*
*தாயகக்கனவு சுமந்த நெஞ்சு*
*தானைத் தலைவனைக்காண வந்தபோது*
*பாரத நாடு உன்னைப் பறித்ததோ!*
*விடியலுக்காய்ச் சென்றவனே*
*விடுதலைக்கு விழுதாய் நின்றவனே*
*ஓராண்டின் நினைவலைகள் .........*
*எங்கள் நெஞ்சோடு*
*உங்கள் கனவலைகள்:*
*கிட்டண்ணா !*
*உன் உருவம் சீறிவருகையில்*
*சிங்களப்படை சிதறி ஓடும்.*
*சுற்றி நின்ற கால்கள் வலுப்பெறும்.*
*எந்த முற்றுகையின்*
*முதுகெலும்பையும் முறித்தவன் நீ.*
*வெற்றிதந்த உன் கால்களிலொன்று*
*வெறுமையாகிப் போன போதும்*
*தமிழீழத்தின்மீது தளராது தாகமுற்றவன்.*
*கடல்கடந்த திசையாவும்*
*களங்கண்ட வேங்கைகளின்*
*வீரமதை விளங்கச் செய்தவன்.*
*தலைவனது கனவுகளின்*
*பெரும் பரப்பாய் நின்றவனே*
*நீர்ப்பரப்போடு கரைந்தாய் நீ.*
*நீறுபூத்த விழிகொண்டு தேடுகிறோம்*
*நீ தோழர்களோடு*
*துயின்ற கடலை.*
*வானம் தொட்டு அலை ஆர்ப்பரிக்கும்.*
*நெருப்பெறிந்து முகில் நீண்டு செல்லும்.*
*விழிப் பொறிகக்க புலிவீரர்*
*புதிதாய்ப் பிறப்பர்.*
*எதுவந்த போதும்*
*தமிழ் ஈழத்துக்காய் எழுவர் !*

கொற்றவை

# வீரத்தமிழ் தளபதி

வல்வைக்கரையோடெழுந்த புயல் ஓய்ந்ததோ!
வண்ணத்தமிழ் ஈழமதின் மலை சரிந்ததோ!
வங்கக்கடல் அலைமடியில் புலி தவித்ததோ!
வஞ்சகரால் எங்களது குயில் மடிந்ததோ!

சிங்களத்துப் படைகலங்கும் நாமம் கொண்டவன்.
சிந்தனையில் ஈழமக்கள் வாழ்வைக் கொண்டவன்.
சிறுமலர்கள் இதயமதில் சிரித்து நின்றவன் - சினம்
கொண்டெழுந்து தன்னுயிரைத் தான்தகர்த்தவன்.

நெஞ்சமதில் விடுதலைத் தீ ஏந்தி வென்றவன்.
தம்பி கனவுகளின் உருவமாகிக் களங்கள் கண்டவன்.
இரக்கமற்ற கொடியவரின் நினைவறிந்தவன் - வந்த
கப்பலோடு தான் எரிந்து மானம் காத்தவன்.

வெங்களத்திலாடிய எம் வேங்கை வீழ்ந்ததால்
வேதனையில் இதயமெல்லாம் வெந்துபோகுதே!
வீரத்தமிழ்த் தளபதியை இழந்துபோவதோ - என்று
நெஞ்சமெல்லாம் தவித்தவனைத் தேடி நிற்குதே.

தமிழவள்

# ஆயிரமாய் நடக்கின்றோம்

ஒரு விடிவெள்ளி துயில் கொள்கிறது.
தாய் நிலம் அழுவதால்
மனம் பொங்கி எழுந்த
விடிவெள்ளி துயில்கிறது.

தலைவனின் தூதனாகத்
தரணி முழுதும் சுற்றிவந்தவனே!
நீலக் கடலலைக்குள்
உன்னைத் தேடுகிறோம்.
நீயும் உன் தோழர்களும்தான்
எம் விழிகளுக்குள் தெரிகிறார்கள்.

அன்று
அந்நியனோடு களமாடுகையில்
அக்கினிக் குழம்பானாய்.

எதிரிகூடப் புலிகளை ...ா வியந்தான்.
அதற்கு அடித்தள...ிட்டவன்
நீயே.

இப்போ நீ
இங்கு இல்...லையென்று நாம் ...ய்ந்தோமா?
உன் உரு...வாய்
உணர்வ...களைச் சுமக்கின்றோம்.
நீ செ...ன்ற பாதையில்
ஆயி...ரமாய் நடக்கின்றோம்.
வி...ழ விழ எழுகின்றோம்
...விரைவில் ஈழம் அமைப்பதற்காய்.

அமுதநிலா

1993-01...-16 அன்று வீரச்சாவை தழுவிக்
கொண்ட சே...ணல் கிட்டு அவர்களுக்கும் ஏனைய
ஒன்பது போ...ராளிகளுக்கும் எமது வீரவணக்
கத்தை தெ...ரிவித்துக் கொள்கின்றோம்.

**- விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு**

# நோபல் பரிசு பெற்ற கறுப்பினப் பெண்மணி

## ரொனி மொறிசன்

1993ஆம் ஆண்டில், இலக்கியத் துறைக்கான நோபல் பரிசைப் பெற்ற முதலாவது அமெரிக்கக் கறுப்பினப் பெண்மணி.

1931ஆம் ஆண்டில்பிறந்த ரொனி இதுவரை ஆறு நாவல்களும், ஒரு சிறுகதையும், ஒரு நாடகமும், ஏராள மான விமர்சனக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

''நான் ஒரு நாவலை எழுதத் தொடங்கும்போது அதன் கதை எனக் குத் தெரிந்திருக்கும். ஆனால் அது ஒரு கடினமான விடயமல்ல. ஒரு கதையை யோசிப்பது யாரும் செய்து விடக்கூடிய ஒன்றுதான். ஆயினும் வாழ்வை உயிருள்ள பாத்திரங்களாக மாற்றுவது, அந்தப் பாத்திரங்கள் நட மாடப் பொருத்தமான சூழலை ஏற் படுத்துவது, எனது கரிசனத்துக்குரிய மக்களாக அந்தப் பாத்திரங்களை ஆக்குவத — இவைதான் கடினமான விடயங்கள்''

என்று ரொனி கூறுகிறார்.

ரொனியின் நாவல்களில் கவிதைக் குரிய அழகிருப்பதாகச் சுவீடன் அக தமி தனது அபிப்பிராயத்தைக் கூறு கிறது.

''என்னிடம் இருபத்தாறு ஆங்கில எழுத்துகள் மட்டுமே உண்டு. நிறங் களோ, இசையோ என் கைவசம் இல்லை. ஆனால் நான் பாவிக்கும் எழுத்துக்களின் ஊடாக எனது வாச கன் நிறங்களைப் பார்க்கவேண்டும். இசையைக் கேட்கவேண்டும். கேட்கச் செய்தேயாகவேண்டும்''

என்று கூறும் ரொனி மொறிசனின் எழுத்துக்கு நோபல் பரிசை வாங்கித் தந்தது என்ன?

ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப் பால் அல்லது கற்பனைக்கு அப்பால் ஒருவரது குற்றங்களை உள்வாங்கி மனிதத் தன்மையுடன் அதைப் புரிந் துகொள்ள வேண்டும் என்ற கருத் தைத் தனது ஆறு நாவல்களிலும் மிக அற்புதமாகப் படைத்து, அதன் மூலம் தன்னை நோபல் பரிசுக்குத் தகுதியா க்கியுள்ளார் ரொனி.

1974-ம் ஆண்டு இவர் எழுதிய ''சூலா'' என்ற நாவலில் ''சூலா'' என்ற பிரதான பாத்திரம் தனது மர ணப் படுக்கையில் பின்வருமாறு பேசு கிறது.

''இந்த நாட்டின் ஒவ்வொரு கறுப்புப் பெண்ணும் என்ன செய் கிறாள் என்று எனக்குத் தெரியும். என்னைப் போலவே அவர்களும் இற ந்து போகிறார்கள். ஆனால் அவர் கள் ஒரு மரக்கட்டையாகச் சாகிறா ர்கள். நான் சந்தனக் கட்டையாகச் சாகிறேன்''.

இந்தச் சொற்களை, ரொனியின் தனிப்பட்ட தத்துவம் என்று எடுத்துக் கொள்ள முடியாவிட்டாலும் உலக



இலக்கியத்தில் ரொனியின் வேலை யைக் குறிப்பாக உணர்த்துவன என்று கொள்ளலாம்.

ரொனிக்கு மனதில் கதைகள் எவ் வாறு தோன்றும்?

''எனது கதைகள் என் மூளையில் ஒரு மின்னல் கீற்றாய்த் தோன்றும். அந்த மின்னல் தோன்றுவதன் விஞ் ஞான விளக்கம் எனக்குத் தெரியாது. ஒரு முறை தோன்றும் மின்னல் கீற் றைக் கைவிட்டால் அது மீண்டும் திரும்பப்போவதில்லை''

என்பது அவரது கூற்று.

அடிமைப்படுத்தப்பட்ட கறுப்பர் களைப்பற்றியே எப்போதும் எழுதுகிற ரொனி ''நான் எப்போதும் கறுப்பர் களின் உலகையே காணுகிறேன். வெள்ளையர்களைப் பற்றி எழுதக் கூடாது என்று நான்நினைக்கவில்லை. ஆனால் நான் எழுத முனையும் அந்த மின்னல் கீற்றை வளர்க்க முனையும்போது அதற்குப் பொருத் தமாகக் கறுப்பர்களே அமைகின்ற னர்'' என்று கூறுகிறார்.

கடந்த காலத்தை ஒரு தெளி வான கோணத்தில் இருந்து பார் த்து, இவ் வுலகில் வாழ்வதற்கு அதை ஒரு பயனுள்ள பொறிமுறை ஆக்குவதில் ரொனி எப்போதும் அதிக கவனம் செலுத்துவதாகத் தெரிகிறது. அவரது மூன்றாவது நாவலான ''சோங் ஒஃப் சொலமன்'' இல் இது மிக நன்றாகவே தெரி கிறது.

''மனிதத் தன்மை இன்றி வாழ் வது என்பது பயனற்ற வாழ்வே. தனது அறியாமையால் ஆக இருந் தாலும் தனது சூழல் மாசடைவதை ஒருவன் புரிந்து அதற்குப் பொறுப் பேற்றுத்தான் ஆகவேண்டும்'' என் பது அவர் கருத்து.

இதயத்தைக் கொடூரமாகப் பிசைகின்ற வன்செயல்கள் ரொனி யின் நாவல்களில் வரும். ஒரு கை அரிவாளினால் தனது குழந்தையை அரிந்து போடுகிற அடிமை, தனது எஜமானிக்குப் பின்னே சென்று அவ ளைச் சுட்டுத் தள்ளிவிடும் அழகு சாதனப்பொருள் வியாபாரி போன்ற பல மனிதர்கள் வருவார்கள். ஆனால் அவை எதுவும் அர்த்தமற்ற இறப்புகளாக இருக்காது. அது சரித் திரத்தின் வேலை. பல தசாப்தங்க ளாகக் குடும்பங்களில் ஏற்பட்ட ஏமாற்றம், வேதனை, அடிமைத்தனத் தின் வெளிப்பாடு போன்றவற்றின் குறியீடுகளே அவையாகும்.

ரொனியின் நாவல்களில் பேய் களும் பொம்மைகளும் வரும். மக்கள் யன்னல்களில் இருந்து குதிப்பார்கள். கூரைகளிலிருந்து எலும்புகள் கொண்ட பைகள் தொங்கும். மரங் களில் உடல்கள் தொங்கும். 'சோங் ஒஃப் சொலமன்' என்ற நாவலில் இன்சூரன்ஸ் ஏஜண்ட் ஒருவர் ஆஸ் பத்திரியின் கூரையில் இருந்து பறப் பதற்காகக் குதிக்கிறார். இந்த நம்ப முடியாத, விசித்திரமான சம்பவங்கள் ரொனியின் பாத்திரங்களைப் பற் றிக் குறிப்பாகக் காட்டும். அவர்க ளின் சரித்திரத்தில் கொடுமைகளும் ஏமாற்றங்களுமே மலிந்துள்ளன. சாதா ரண விடயங்கள் அவர்களின் கைக ளுக்கு அகப்படுவதில்லை.

தனது நாவல்கள் சமூகத்தில் என்ன மாற்றத்தைச் செய்ய வேண் டும் என்பது பற்றி ரொனி இவ்வாறு கூறுகிறார்:

''மறைக்கப்பட்டிருக்கும் பாத்தி ரங்களை வெளிக்கொணர உதவ வேண்டும். கடந்த காலத்தின் பயனு ள்ள விடயங்களையும் பயனற்ற விட யங்களையும் இனம் காணவேண்டும். அத்துடன் அவை வாசகர்களுக்குச் சத்துள்ள உணவையும் வழங்க வேண்டும்.''

அதிக அளவு நூல்களை வாசிக் காத கறுப்பர்களே இவரின் பாத்தி ரங்கள். அவர்களே இவரின் வாசகர் களுமாவர்.

''பீ லவ்ட்'' என்ற நாவலில் தனது பிள்ளைகளைத் திரும்பவும் அடிமைகளாக அனுப்புவதை விட அவர்களைக் கொலை செய்து விட லாம் என்று முயற்சிக்கின்றாள் ஒரு அடிமைப்பெண். அடிமையாக வாழ் வதன் அனுபவத்தை அதன் முழுக் கருத்தை இக் கதை மூலம் அவர் சொல்ல முனைகிறார்.

'புளூயெஸ்ட் ஐ' என்ற நாவலில் பிற்பட்ட கிராமத்தைச் சேர்ந்த ஒரு இளம் கறுப்பு இனப்பெண் நீலக் கண் களைப் பெற விரும்புகிறார். 'ரார் பேபி'யில் அழகான கறுப்புப் பெண் ஒருத்தி பாரிசின் செழிப்பான வெள்ளை உலகுக்கும் கொலைக் குற்றவாளியான தனது கறுப்பு நிறக் காதலனின் உலகுக்கும் இடையில் அகப்பட்டுக் கிழிந்து போகிறாள். ஆனாலும் 'ரார்பேபி'யில்ரொனிஎழுது கிறார், ''வாழ்வின் சில பொழுது களில் நாம் காணும் அழகு போது மானது. அதைப் படம் எடுக்கத் தேவையில்லை. ஓவியம்தீட்டவேண்டி யதில்லை. அதை நினைவு வைத்திரு க்க வேண்டியது கூட இல்லை. அதைப் பற்றி எழுதி வைத்திருக்கவும் தேவை யில்லை. யாருக்கும் அதைப்பற்றிச் சொல்ல வேண்டியதும் இல்லை. அது அப்படி இருப்பதே போதுமானதாய் இருக்கும்.''

ரொனியிடம் காணப்படும் இந்த அற்புதமான மனநிறைவே ஒரு வழி யில் அவருக்கு இந்த அதி உயர் பரி சைத் தேடித் தந்தது எனலாம்.

கோகிலா மகேந்திரன்

# தஸ்லிமா நஸ்ரீன்

'லஜ்ஜா'.

அயோத்தியில் பாபர் மசூதி உடைக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, வங்காளதேசச் சிறு பான்மையினர் மீது நடாத்தப்பட்ட வகுப்புவாதக் கொடுமைகள் பற்றிய நாவல் இது. இதை எழுதியவர் பெண்ணியவாதியும், எழுத்தாளரு மான முப்பத்தொரு வயதான தஸ் லிமா நஸ்ரீன். இவர் வங்காளதேசத் தைச் சேர்ந்தவர்.

சிறுபான்மையினருக்குச் சார் பான இந்த நூலை எழுதியதற்காக தஸ்லிமாவுக்கு மரணதண்டனை விதி க்க வேண்டும் என்று மத அடிப்படை வாதிகள் குரல் எழுப்புகின்றனர். சமீபத்தில் மதவாத அமைப்புகள் ஒன்று சேர்ந்து வங்காளதேசத் தலை நகர் டாக்காவில் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

இவரது நாவல் ஏறத்தாழ நான்கு இலட்சம் பிரதிகள் விற்பனை யாகிவிட்டன. வங்காளதேச அரசால் இந்நூல் தடைசெய்யப்படும்வரை வங்காளதேசத்தில் மட்டும் ஆறு மாதங்களில் ஐம்பதினாயிரம் பிரதி கள் விற்பனை ஆயின.

வங்காள தேசத்தின் முன்னணிக் கவிஞரான ஷம்சுர் ரஹ்மான், ''சிறு பான்மையினருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பதிவு செய்துள்ள முக்கியமான ஆவணம் இது. பல விடயங்களை வெட்ட வெளிச்சமாக்கி இருக்கிறது'' என்று இந்நூல் பற்றிய தனது கருத்தைத் தெரிவித்தார்.

புதுமைக்கு முட்டுக்கட்டைபோடு [illegible]ற, பிடிவாதம் நிறைந்த ஒரு சமூ [illegible]த்திற்கு நஸ்ரீனின் படைப்புக்கள் க[illegible]மாறாகவே இருந்து நே[illegible]ன்றன. அவருடைய வரு[illegible]ட்டுரைகள் கொண்ட 78 க[illegible]தோ காலம்' என்ற 'நிர்ப[illegible]பு மூன்று வருடங் தொகுப்[illegible]ன்பு வெளியான களுக்கு [illegible]களின் கவனத் போது ம[illegible]தார். ''மதம் தைக் கவர்[illegible]ப்படி போகப் பெண்களை [illegible]டத்துகிறது; பொருளாக ந[illegible]த்துகிறது'' கொடுமைப் படு[illegible] குரானில் என்று நிரூபிக்க [illegible]ள மேற் உள்ள வாசகங்க[illegible]விளாசித் கோள் காட்டி [illegible]ரீன். தள்ளியிருந்தார் நஸ்.

[illegible]ந்த [illegible]டைய

அவருடைய சொ[illegible] அனுபவங்களே அவருடை[illegible] பெண்ணியவாத எ[illegible] ணங்களை உறுதிப்படு[illegible] தின. ''பெண்கள் வித்தி யாசமாக நடத்தப்படுவதை என்னுடைய ஒன்பதாவது வயதில் முதல் முறையாக உ[illegible] தேன். எனக்கு வெளியில் ஓடி [illegible] விளையாடப் பிடிக்கும் ஆனால் [illegible] க்கு பத்து வயதாகும் போதே இ[illegible] மேல் வெளியே போகக் கூடாது என்று சொல்லி விட்டார்கள். நல்ல பெண்கள் வெளியில் போக மாட்டார் கள் என்றார்கள். ஆனால் என் இர [illegible]ணர்ந் [illegible]பாடி [illegible]ான [illegible]வி [illegible]ண்டுசகோதரர்களுக்குதடையில்லை'' என்கிறார்.

பெண்களும் புரட்சிகர சிந்தனை களும் மூலையில் முடங்கிக் கிடக்க வேண்டும் என்று கருதுகின்ற ஒரு



சமூகத்தில் தன் கருத்துக்களை நெஞ்சு நிமிர்த்தி சொல்லி அசாத்திய துணிச்சலுடன் வாழ்க்கை நடத்துவ தற்காகவாவது இந்த எழுத்தாளரை எத்தனை பாராட்டினாலும் தகும்.

நன்றி
இந்தியாடுடே

# ஒன்பது வயதுப் பெண் கவிஞர்

நிகா துர்பினா என்னும் ஒன்பது வயதுப் பெண் கவிஞரைப் பற்றிய திரைப்படம் அண்மையில் உக்ரே னியத் தொலைக் காட்சியில் காட் டப்பட்டது. யான்டாவைச் சேர்ந்த இந்தப் பெண் கவிஞரின் கவிதைகள் சோவியத் ஏடுகளில் அடிக்கடி வெளி வருகின்றன. ஆழ்ந்த பொருள் படை த்த இக் கவிதைகள் மக்களைப் பெரி தும் கவர்ந்துள்ளன.

நிகா துர்பினா நான்கு வயதி லேயே கவிபாட ஆரம்பித்துவிட்டாள். ''பொதுவாக இரவில் என் உள்ளத் தில் கவிதைகள் ஊற்றெடுக்கின்றன. உலக அமைதி அனைத்து மக்களின் இன்பம் இவைபற்றிய எண்ணங்களே என் கவிதைகள்'' என்று கூறுகிறாள். இவளது முதற் கவிதைத் தொகுப்பு அண்மையில் மொஸ்கோவில் வெளி யானது.

பாகிஸ்தான் சமுதாயத்தில் பெண்கள் எப்போதுமே மோசமாகத் தான் நடத்தப்படுவார்கள். இதை யெல்லாம் பார்த்து வருத்தப்பட்ட அக்ரம் கட்டூன் என்ற பெண்மணி பெண் களுக்குத் தனி வங்கி ஆரம் பிக்க வேண்டும் என நினைத்து செயல்படுத்தியும் காட்டினார்.

1989 ஆம் ஆண்டு இந்த வங்கி தொடங்கப்பட்டது. அரச நிதிஉதவி மற்றும் சில தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் உதவி இதற்குக் கிடைத் தது. இரண்டே ஆண்டுகளில் இந்த வங்கி நல்ல வளர்ச்சி அடைந்தது.

நன்றி
உலகப் பெண்கள்



எமது சுதந்திர இயக்கத்தின் ஆரம்ப காலம்தொட்டே பெண் விடுதலையை ஒரு பிரதான இலட்சியமாக நாம் வரித்துக் கொண்டோம். பெண்கள் விழிப்புற்று, எழுச்சிகொண்டு, தமது சொந்த விடுதலைக்காகவும் தேசத்தின் விடுதலைக்காகவும் போராட முன்வரும்போதுதான் அந்தப் போராட்டம் ஒரு தேசியப் போராட்டமாக முழு வடிவத்தைப் பெறும் என்ற உண்மையை நாம் அன்று தொட்டே உணர்ந்திருந்தோம்.

நாம் ஒடுக்கப்பட்டு வரும் ஒரு மக்கள் இனம். அந்நியனின் அடக்குமுறையால் நாம் அழிக்கப்பட்டு வந்தபோதும் எமக்குள்ளே எமது சமூக வாழ்வில் நாம் எம்மவர்களை மோசமான முறையில் அடக்கி ஒடுக்கிவருகிறோம். இப்படியாக எம் மத்தியில் நிலவிவரும் ஒரு ஒடுக்குமுறை வடிவம்தான் பெண் ஒடுக்குமுறை. பழமைவாதத்திலும் மூட நம்பிக்கையிலும் ஊறிப்போன எமது சமூக அமைப்பில் நீண்ட நெடுங்காலமாகப் பெண்ணினம் ஒடுக்கப்பட்டுவருகிறது. எமது வேதாந்தங்களும், மத சித்தாந்தங்களும், மனுநீதி சாஸ்திரங்களும் அந்தக்காலம் தொட்டே பெண்ணடிமைத்துவத்தை நியாயப்படுத்தி வந்திருக்கின்றன. ஆணாதிக்கம், சாதியம், சீதனம் என்ற பல்வேறு பரிமாணங்களில் இந்த ஒடுக்குமுறையானது பெண்களின் வாழ்க்கையை ஊடுருவிநிற்கிறது. அவர்களது வாழ்க்கையைச் சிதைத்துவருகிறது.

***தலைவர் திரு. வே. பிரபாகரன்***

## கண்ணீர் வீச்சு

நாங்கள் ஏழைகள்.
துப்பாக்கி முனையாலே
தாக்கப்பட்டவர்கள்.
சிறையினிலே கைதியாய்
கண்ணீர் வடித்தவர்கள்.
தமிழர்களாய்ப் பிறந்து
எருக்கம்பூவாய்க்
காய்ந்து போனவர்கள்.
இனப்பிரச்சினை காரணமாக
நம்நாட்டு அரச இராணுவ
கெடுபிடிகளுக்கு ஆளானவர்கள்.
இன்று
அதனால்தான்
அரசியல்வாதிமுதல் அன்னியன் ஈறாய்
அடிமட்டம் வரை
எங்கள் இன அம்மியில்
எளிதாய்
மிளகாய் அரைத்துவிடுகிறார்கள்.
ஆம்... நித்தம் நித்தம்
பிறந்து இறக்கின்றோம்.
இச்சிறையினிலே ஈசல்களாய்
வெதும்பிப் போகிறது எமது ஆசைகள்.
இந்த அந்நியன் சிறையினிலே
இனி எதற்கும் தயங்கமாட்டோம்.
அறுகுகளாய் இருக்கும்போது
பாறையிலும் படர்வோம்.
மடிய மாட்டோம்.

-றெஜினா

## நட படைக்கு

கண்ணை
இரு மணிகளை
காக்கின்ற இமைகள்தான்
ஆனால்
கண்களிரண்டும்
காண முடியாத இடத்தில்.

மண்ணை- எம்
மக்களை
காக்கின்ற காவலர்.
ஆனால்
மண்ணுள் மறைந்துவிட்ட
மாணிக்கக்கட்டிகள்.

இனியும்
நீயெதற்கு நிற்கிறாய்?
எழு உடனே.
நட படைக்கு.
ஈனம் இரந்து வாழல்.

-பவானி

## சுதந்திரத்தைத் தேடி

''தாயுடன் இரிக்கிறதை எப்புடிப் பிரிக்கிறது? பேசாம வாங்க போவம்'' எனத் தோழிகள அழைத்தும்கூட, ''திரத்திப் பாப்போம். அப்ப தாய் குட்டியைப் போட்டுத்து ஓடும் எடுப்பம்'' என்றாள். அவள் சொன்னபடியே நடக்க, குட்டி வளர்மதி கையில். அருமையாக அதை வளர்த்தாள். ஒருநாள் திடீரென பெரிய மழை பிடித்துக் கொண்டது. பொலித்தினாலான சிறு குடிசையில் நிறையப் பேர் நிற்க வேண்டிய நிலை. அங்கு வளர்மதியும்... சாக்கின்கீழே வெகு நிம்மதியாக உறங்கியபடி குட்டி. வளர்மதி அதைக் கவனிக்காமல் சாக்கின்மேல் ஏறி மிதித்ததில் குட்டி இறந்து விட்டது ''ஐயோ உங்கட புள்ளையை நீங்களே சாகவச்சிப் போட்டியளே'' என சகபோராளிகள் அனுதாபம் நிறைந்த குரலில் கூற, அவளால் எதுவுமே செய்ய முடியவில்லை. தன் துக்கத்தை வெளியில் காட்டாது மௌனமாக நின்றாள்.

அதன் பின்னர் குட்டிக் குரங்குகளைக் காணும்போதெல்லாம் ''வளர்மதியக்காவோட புள்ளை போகுது'' எனும் பிள்ளைகளின் கிண்டல்களை இதழின் ஓரத்தே ஒரு சிறு புன்னகையுடன் சமாளித்துக்கொள்வாள்.

மாதத்தின் பாதி நாட்களில் எதிரியின் வரவை வேவு பார்த்து. மிகுதி நாட்களில் திட்டம் தயாரித்து தாக்குதல் நடாத்தி ஆயுதங்களை அள்ளியபடி, வெற்றியுடன் திரும்புவர். இவ்வாறே மாதம் ஒருமுறை சண்டை எனக் கணக்கிட்டுத் தாக்குதல்கள் தொடரும். வேவுப் பிரிவு வந்துவிட்டது என அறிந்ததுமே வளர்மதியுடன் சில போராளிகள் பொறுப்பாளரின் முன் நின்று ''அண்ணோ, நாங்களும்'' என்பர். அனுமதி கிடைத்ததும் துள்ளியபடி சண்டைக்குரிய விடயங்களைக் கலந்துரையாடச் சென்றுவிடுவர்.

போரில் வெற்றியுடன் திரும்பிய பின், கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். வளர்மதி பிள்ளைகளுடன் இணைந்து தேவையான உதவிகளைச் செய்து. மேடை ஏறுவதில் பிள்ளைகளுடன் பிள்ளையாக நின்று சிரமப்படுவாள். இம்மாத நிகழ்ச்சியில் பங்குபெறும் போராளிகளில் சிலர் மறுமுறை நடைபெறும் நிகழ்ச்சிகளில் இருக்கமாட்டார்கள். இப்படித்தான் சோகங்களினூடு கலை நிகழ்வுகளும் கலந்திருந்தன,

1992 சித்திரை மாதம் பொங்கல் விழா. தமிழரின் பூர்வீகவிழா. அன்று பிள்ளைகளுக்கு வழங்கவென 'கேக்' வந்திருந்தது...அங்கு இவையெல்லாம் வருவது மிகவும்அபூர்வம்; பிரித்துக் கொடுக்கும் பொறுப்பு வளர்மதியிடம் ஒப்படைக்கப்பட, பெரிய பெரிய துண்டுகளாக வெட்டி ஒவ்வொரு பிள்ளையாக அழைத்துக் கொடுத்த வண்ணம் 'சாப்புட்டுத்து மிச்சத்தை வைய்யுங்க. சண்டைக்குப் போற நேரம் பசிச்சா தின்னலாம்' என்று கூறினாள்.

குரங்குக்குட்டிக்குப் பின்னர் அவளிடம் லக்சி எனும் பெயருடைய ஒரு கிளி இருந்தது. சில நேரங்களில் அதனுடன் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிப்பாள். சண்டைக்குழுவுக்குப் பொறுப்பாக இருந்தவள், காட்டிலுள்ள அனைத்துப் பெண் போராளிகட்கும் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டாள். அந்த வேளையில்தான் கள்ளிச்சைப் பகுதியில் இருந்து காவல் உலாவரும் இராணுவ அணி மீது தாக்குதல் நடத்துவதற்கு ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இதற்கிடையில் அவள் ஆசையாக வளர்த்த கிளி இறந்துவிட்டது. அது இவளுக்கு மிகவும் வேதனையை உண்டாக்கினாலும் அதனை வெளிக்காட்டாதவாறு தனது பணிகளைச் செய்த வண்ணம் இருந்தாள். மூன்று மணிக்குப் பயணம் ஆரம்பமானது. பதினான்காம் திகதி நிலை எடுக்கப்பட்டது. சிறிது தூரத்தில் சமையல் வேலை நடைபெற இரவு உணவு உண்ட பின்னர் பதினைந்தாம் திகதி மதியம் இரண்டு மணிவரை, எதிர்பார்த்த எதிரியின் அணிவராததையடுத்து முன்னைய இடத்துக்கு மீள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தனது உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதை அறிந்து கொண்ட வளர்மதி, அதனைப் பெரிதுபடுத்தாமல் புறப்பட ஆயத்தமானாள். குழுவின் தலைவியல்லவா அவள்! அவள்சோர்ந்தால் பிள்ளைகளை யார் வழிநடத்துவது? அவள் முன்னே நடக்க, பின்னே பிள்ளைகளும் ஒற்றை வரிசையாகத் தொடர்ந்தனர். அவர்களுக்கு முன்னே ஆண் போராளிகளும் அதேபோலச் சென்று கொண்டிருந்தனர்.

திடீரெனத் துப்பாக்கி வேட்டொலிகள். அனைவரும் ஒருகணம் நின்று தமது நிலைகளை சரி செய்து கொண்டனர். ஒலிக்குரிய காரணம் ஒரு கரடி என்பதை அறிந்ததும், அதனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எல்லோருக்கும் எழ, ''அக்கோ கெரடி'' என்றவாறு மிகுதியை முடிக்காது நின்ற பிள்ளைகளின் மனதை அறிந்து, ''செரி போய்ப் பாத்தித்து வாங்க. நான் இதில இரிக்கன்'' என்றவாறு ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டாள்

என்னதான் மறைத்திருந்தாலும்உடல்நிலையைஅவளின்முகம்தெளிவாகஎடுத்துகாட்டியதை அவதானித்த மருத்துவப் பிரிவு பெண்போராளி, ''அக்கோ வெருத்தமாக்கா?'' எனக் கேட்கவும் ''காச்சல்தான், கெஸ்ரம் இல்ல'' என்று மொட்டையாக பதிலளித்தாள். பனடோல்ஒன்றுகொடுக்கப்பட்டது. கரடி பார்த்து திரும்பினர் பிள்ளைகள். பயணம் தொடர்ந்தது. பதினைந்தாம் திகதி இரவு ஒரு மலைஅடிவாரத்தில் உணவருந்தி ஓய்வெடுத்துக் கொள்கின்றனர். சிறிதளவு உணவு உண்ட பின்னர் வளர்மதியும் உறங்கினாள். மறுநாள் காலை உணவை முடித்த பின்னர் பயணம் தொடர்ந்தது பிள்ளைகளுக்கு முன்னே வழிகாட்டி நடந்த வளர்மதி, சிறிது சிறிதாகப் பின்தங்கி, கடைசியாக வந்துகொண்டிருந்தாள் அப்போதுதான் அவள் ''எனக்கு இயலாமக்கிடக்குது. தெலை எல்லாம் கிறுகுது'' எனக் கூறினாள். சில மணித்தியாலங்களுக்கு அனைவருக்கும் ஓய்வு வழங்கப்பட்டது ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து விட்டாள் வளர்மதி.

வாந்தி எடுத்து களைப்படைந்ததால் 'சேலைன்' ஏற்றப்பட்டது மீண்டும் ஒன்றரை மைல் நடைப்பயணம் அவளால் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. அவளின் அனுமதியின்றியே பிள்ளைகள் அவளை 'ஸ்ரெச்சரில்' ஏற்றினர். அவளை மாறி மாறிச் சுமந்த வண்ணம பிள்ளைகள் நடந்தனர். இரவு ஒரு இடத்தில் தங்கினர். வேறு இடத்துக்கு வருமாறு அழைப்புவர மீண்டும் பயணம் ஆரம்பமானது வளர்மதி 'ஸ்ரெச்சரில்' ஆடாமல் அசையாமல் கிடந்தாள் களைப்பு மிகுந்ததால் 'ஜீவனி' கொடுக்கப்பட்டது. அவளது உதடுகள் நிறையப் பேசத் துடித்தன. ஆனால் அவை தொண்டையினுள்ளேயே சிக்குண்டு போயின. ' சாயம் தாங்க!'' இறுதியாக மிகவும் சிரமப்பட்டு வந்த சொற்கள்தான் அவை. அதைக் குடித்த சில நிமிடங்களில் எல்லோரிடமிருந்தும் அவள் விடைபெற்றுக் கொண்டாள்.

வளர்மதி! அவள் சந்தித்த களங்கள் ஏராளம். கள்ளிச்சை, வாகனேரி, சிங்கபுர, கொழும்புவீதி, மண்முனை, மகிழடித்தீவு, உன்னிச்சை, பாலையடிவெட்டை, சித்தாண்டி பொலிஸ்நிலையம் எனப் பல களங்கள். ஒவ்வொன்றிலுமே பலமாகச் செயற்பட்டு. எதிரிக்குத் தக்க பதிலடி கொடுத்தவள். ஒரு வேங்கை விழ பல வேங்கை எழுவர் என்பதற்கு அவள் நல்ல உதாரணம் அவள் விட்ட பணியைத் தொடரவெனப் பல பெண்புலிகள் தென் தமிழீழத்திலிருந்து எழுந்து தயாராகி வருகின்றார்கள்,

நிலா, கல்யாணி, வளர்மதி, விவேகா, நிரந்தரி என பல உடல்கள் அக்கானகத்திடையே விதைக்கப்பட்டன. ஆயினும், பணி தொடர்கின்றது. சோகங்களையே சொந்தமாக்கியபடி, இலட்சியம் ஒன்றை வென்றெடுப்பதற்காகப் பயணம் ஒன்று நடந்து கொண்டிருக்கின்றது.

# நோபல் பரிசு பெற்ற பெண்மணி

ஃ 1901ஆம் ஆண்டு முதல் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. உலகின் தலைசிறந்த விருதாகவும் பரிசுத் தொகை அதிகமுள்ள விருதாகவும் (ரூ. 3.6 கோடி) இது விளங்குகிறது. இந்த விருதை 1992 ஆம் ஆண்டு வரை இருபத்தாறு பெண்கள் பெற்றுள்ளனர். இவர்களில் ஒன்பது பேர் சமாதானத்துக்கான அமைதி விருதைப் பெற்றவர்கள்.

ஃ உலக அளவில் சர்வதேச விருது ஒன்றை மிசக் குறைந்த வயதில் பெற்றவர் 1992 ஆம் ஆண்டு சமாதான விருது பெற்ற செல்வி ரிகோபெர்டா மென்சு (Ricoberta Menchu) என்ற முப்பத்துமூன்று வயது குவாடிமாலா பெண்மணி தான்.

ஃ நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணி மேடம் மேரி கியூரிதான். இவர் தன் கணவருடன் சேர்ந்து 1903இல் பௌதிகத்துக்கான விருதைப் பெற்றார்.

ஃ சமாதான விருது பெற்ற முதல் பெண்மணி பெர்தாவான் சூட்னர் என்ற ஆஸ்திரியப் பெண்மணியே. 'ஆயுதங்களைக் கீழே போடுங்கள்' என்ற தலைப்பில் இவர் எழுதிய ஒரே ஒரு புத்தகத்துக்காக 1905 இல் நோபல் அமைதி விருது கிடைத்தது. இதுவரை பதினைந்து ஐரோப்பியக் கண்டப் பெண்கள் நோபல் பரிசு பெற்றுள்ளனர்.

ஃ அமெரிக்கக்கண்டத்தில் ஐந்துபெண்களும், ஆசியாக் கண்டத்தில் இரண்டு பெண்களும் ஆபிரிக்காவில் ஒரு பெண்ணும் என்று மற்றையபதினாறு விருதுகள் பெண்களுக்குக்கிடைத்துள்ளன. ஆஸ்திரேலியாக் கண்டத்திலிருந்து எந்த ஒரு பெண்ணும் இதுவரை இந்த விருதைப் பெறவில்லை.

ஃ ஆசியாக் கண்டத்துக்குக் கிடைத்துள்ள இரு விருதுகளும் சமாதானத்துக்கே கிடைத்துள்ளன. ஆசியாக் கண்டத்தில் நோபல் பரிசு பெற்ற முதல் பெண் அன்னைதெரஸா. இரண்டாவது விருது 1991இல் பர்மாவின் சூ—கைக்குக் கிடைத்தது.

ஃ தென் ஆபிரிக்காவுக்குக் கிடைத்துள்ள ஒரே விருதும் இலக்கியத்துக்காகக் கிடைத்திருப்பது ஆச்சரியமான ஒன்று.

ஃ மருத்துவத்தில் மூன்று, சமாதானத்தில் இரண்டு, இலக்கியத்தில் ஒன்று என ஆறு விருதுகளை அமெரிக்கா பெற்றிருக்கிறது. அமெரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த சிலி நாட்டுப் பெண்மணி இலக்கியத்துக்கும், குவாடிமாலா பெண்மணி சமாதானத்துக்கும் என மற்றைய இரண்டு விருதுகளைப் பெற்றனர். அமெரிக்கக் கண்டத்துப் பெண்களுக்கு மருத்துவத்திலும், சமாதானத்திலும் அதிக ஆர்வமிருப்பது இதன் மூலம் தெரிகிறது.

ஃ பிரிட்டன் (3), ஜெர்மனி (2), செக்கோஸ்லாவாகியா (1), நோர்வே (1), இத்தாலி (2), சுவீடன் (2), ஆஸ்திரியா (1), பிரான்ஸ் (3) என மேற்கண்ட எட்டு ஐரோப்பியநாடுகளும் மற்றைய பதினைந்துவிருதுகளைப் பெற்றுள்ளன. ஐரோப்பாக் கண்டத்தைப் பொறுத்தவரை இலக்கியத்தில்தான் அதிக விருதுகளை நான்கு பெண்கள் பெற்றுள்ளனர். சமாதானத்துக்கான விருதுகளும் நான்குதான். ஆனால், இதில் ஒரு விருது இரண்டு பெண்களுக்கு சேர்த்தே கொடுக்கப்பட்டது. அடுத்து இரசாயனத்தில் மூன்றும், பௌதிகத்திலும், மருத்துவத்திலும் தலா இரண்டுமாக நான்கு விருதுகள் பெற்றுள்ளனர்.

ஃ எந்தக் கண்டத்துப் பெண்ணும் பொருளாதாரத்துறையில் ஒரு விருது கூடப்பெறவில்லை.

ஃ சில விருதுகள் கூட்டாகவும், சில விருதுகள் தனியாகவும் கிடைத்துள்ளன. இலக்கியத்தில்தான் அதிக விருதுகளைப் பெண்கள் தனியாக (ஆறு விருதுகள்) வென்றுள்ளனர். இந்த வகையில் தனியாக சமாதானத்தில் ஐந்து பெண்களும் (இவர்களில் இருவர் ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்தவர்கள்) இரசாயனத்தில் ஒருவரும், மருத்துவத்தில் ஒருவரும் என பதின்மூன்று பெண்கள் தனியாக நோபல் பரிசை வென்றுள்ளனர். மற்றைய பதின்மூன்று விருதுகளும் கூட்டாகக் கிடைத்துள்ளன.

ஃ இரண்டு துறைகளில் பரிசு பெற்ற ஒரே பெண் மேடம் மேரி கியூரி அம்மையார்தான். இவர் இரசாயனத்தில் ஒருமுறை தனியாகவும், பௌதிகத்தில் தன் கணவருடன் சேர்ந்து ஒரு முறையும் பெற்றார். இரசாயனத்தில் இந்தத் தம்பதிகளின் மகள் ஜோலியட் கியூரி 1935இல் பெற்றார்.

## இதுவரை நோபல் பரிசு பெற்ற பெண்கள்

| இல. | ஆண்டு | துறை | பெயர் | நாடு |
|---|---|---|---|---|
| 01 | 1903 | இயற்பியல் | மேரி கியூரி | பிரான்சு |
| 02 | 1905 | சமாதானம் | பெர்தாவான் சூட்னர் | ஆஸ்திரியா |
| 03 | 1905 | இலக்கியம் | செல்மா லேகர்லாஃப் | சுவீடன் |
| 04 | 1911 | வேதியியல் | மேரி கியூரி | பிரான்சு |
| 05 | 1926 | இலக்கியம் | கிரேஸியா டெலடா | இத்தாலி |
| 06 | 1928 | இலக்கியம் | கிலக்ரிட் அன்செட் | நோர்வே |
| 07 | 1931 | சமாதானம் | யேன் அடம்ஸ் | அமெரிக்கா |
| 08 | 1935 | வேதியியல் | ஜோலியட், கியூரி (மேரி கியூரியின் மகள்) | பிரான்சு |
| 09 | 1938 | இலக்கியம் | பயேர்ஸ் எஸ்பக் | அமெரிக்கா |
| 10 | 1945 | இலக்கியம் | மிஸ்ட்ரல் காபிரில்லா | சிலி |
| 11 | 1946 | சமாதானம் | எமிலி கிரீன் பால்க் | அமெரிக்கா |
| 12 | 1947 | உடலியல் மருத்துவம் | ஜெர் ஓரஸா கோரி | செக்கோசிலாவாகியா |
| 13 | 1963 | இயற்பியல் | மரியா ஜியோபெர்ட் மேயர் | ஜெர்மனி |
| 14 | 1964 | வேதியியல் | டாரதிக் குரோபூட் ஹட்கின் | பிரிட்டன் |
| 15 | 1966 | இலக்கியம் | நெல்லி சாஸ்ச் | ஜெர்மனி |
| 16 | 1976 | சமாதானம் | பெட்டி வில்லியம்ஸ் | பிரிட்டன் |
| 17 | 1976 | சமாதானம் | மெய்ரியட் கோரிகன் | பிரிட்டன் |
| 18 | 1977 | உடலியல்மருத்துவம் | ரோஸலின் யாலே | அமெரிக்கா |
| 19 | 1979 | சமாதானம் | அன்னை தெரஸா | இந்தியா |
| 20 | 1982 | சமாதானம் | ஆல்வா மீர்டால் | சுவீடன் |
| 21 | 1983 | உடலியல் மருத்துவம் | பார்யரா மெக்லின்டாக் | அமெரிக்கா |
| 22 | 1986 | உடலியல் மருத்துவம் | ரீட்டா லெவிமோண்ட்டல் சினி | இத்தாலி |
| 23 | 1988 | உடலியல் மருத்துவம் | கெர்ட்ரூட் ஏலியான் | அமெரிக்கா |
| 24 | 1991 | சமாதானம் | ஆங்-சான்-சூ-கை | மியான்மார் (பர்மா) |
| 25 | 1991 | இலக்கியம் | நாட்டின் கோர்டிமெர் | தென் ஆப்பிரிக்கா |
| 26 | 1992 | சமாதானம் | ரிகோபெர்டா மென்சு | குவாடிமாலா |

ஃ ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் நோபல் பரிசு பெற்றது மேரி கியூரி குடும்பத்தில் மட்டுமே.

ஃ 1901ஆம் ஆண்டு முதல் 1975ஆம் ஆண்டுவரை 15 பெண்கள் நோபல் பரிசு பெற்றார்கள். 1976ஆம் ஆண்டிற்குப் பிறகு 1992ஆம் ஆண்டுவரை பதினொரு பெண்கள் விருது பெற்றுள்ளனர். எழுபத்தைந்து ஆண்டுகளில் பதினைந்து பெண்களே பெற்றதும், அடுத்த பதினேழு ஆண்டுகளில் பதினொரு விருதுகளைப் பெண்கள் வென்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாகக் கடந்த பத்தாண்டுகளில் ஏழு விருதுகள் பெண்களுக்குக் கிடைத்துள்ளன 1991ஆம் ஆண்டிலோ முதன் முதலாக இரண்டு பெண்கள் வெவ்வேறு துறைகளில் (சமாதானம், இலக்கியம்) தனித்தனியாகக் கூட்டு இல்லாமல் பரிசுகளை வென்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஃ கடந்த பதினைந்து ஆண்டுகளில் அமெரிக்கக் கண்டத்துப் பெண்கள் சமாதானத்தில் ஆறும், மருத்துவத்தில் நான்கும் எனப் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

நன்றி - மலர்மல்லிகை

பெண்ணே நீ அழுத கண்ணீர்தான் இங்கு கடலாக... நீ விடும் பெருமூச்சே இங்கு புயலாக. என்று உன் சீற்றம் துப்பாக்கி வேட்டாய் தீருமோ, புரட்சிக் களத்தில் குருதி சிந்துமோ, அன்றுதான் உனக்கு விடுதலை.

லெப். துர்க்கா

வியட்நாம் போராளிகளின் வெற்றிக்குக் காரணம் அவர்களின் தன்னம்பிக்கை. நாம் அவர்களையும்விடத் தன்னம்பிக்கை அதிகம் உடையவர்கள். புறப்படுவோம்.

லெப். நித்திலா

இதுமட்டுமல்ல வெற்றி. இனி நமக்கு எல்லாமே வெற்றிதான். இதைவிட இனி நாங்கள் அண்ணாக்களின் துணை இல்லாது தனித்து நின்று இராணுவத்தைத் தாக்கி, வெற்றி பெறவேண்டும்

மேஜர் தாரணி
(பொன்னாலையில் இந்திய இராணுவத்தைத் துரத்தியடித்தபின்)

நான் போகின்ற வழி நல்லது என்றுதான் நான் போகின்றேன். என்னைப்போல் எத்தனை பிள்ளைகள் மனம் விட்டு, பேசுகின்றார்கள். ஒருகுடும்பத்தில் ஒருவராவதுஇயக்கத்தில் இருக்கவேண்டும் என்று ஆசை எனக்குண்டு. எல்லாப் பிள்ளைகளுடனும் சேர்ந்து போராடுவது குற்றமா? தயவு செய்து என்னைக் கூட்டிக்கொண்டு போகின்ற நோக்கத்துடன் வரவேண்டாம்.

மேஜர் யாழிசை /மனோ

பெண்களுக்கு முழுவிடுதலை கொடுத்து ஆண்களுக்கு சமமாக அவர்களை ஆக்கவேண்டுமென்றால் தேசியப் பொருளாதாரம் சமூகமயமாக்கப்படுவதும் பொதுவான பயனுள்ள உழைப்பில் பெண்கள் ஈடுபடுவதும் அவசியம். அப்பொழுதுதான் பெண்கள் ஆண்களுக்கு சமமான நிலையைப் பெறுவார்கள்

ஒரு உழைக்கும் பெண் ஒரு உழைக்கும் ஆணுக்குச் சமமாக - சட்டத்தில் மட்டுமல்லாமல் நடைமுறையிலும் இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். அதற்கு உழைக்கும் பெண் சமூகமயமாக்கப்பட்ட நிறுவனங்களிலும் அரசாங்க நிறுவனத்திலும் மேன்மேலும் அதிகரிக்கும் பாத்திரத்தை வகிக்கவேண்டும். நிர்வாகத்தில் பங்குகொள்வதன் மூலம்பெண்கள் வேகமாக அறிவு பெறுவார்கள், ஆண்களுக்குச் சமமாக முன்னேற்றமடைவார்கள்.

- லெனின்

வாசகர்களிடமிருந்து அபிப்பிராயங்கள், ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தொடர்புகட்கு:

சுதந்திரப்பறவைகள், வெளியீட்டுப் பிரிவு, கோண்டாவில்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்